
# வெண்ணிலா

இதழ் : 10 - ஜூலை 2023.



அபூ முஜாஹித்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விதிக்குள் விழுந்த வெண்சங்கு Dr. ஜஹ்பர்

- கவிஞர் ஸிவூ முனாவரித் -

மோகனப் புன்சிரிப்பும்
முத்து மணிக்கதையும்
வேகமிலா நடப்பும்
வீற்றிருந்த வெண்சங்கே!

ஊர் கடந்தூம் உன்பெயரின்
மரிக்கொழுந்து வாசமடா
யார் வாயைப் பார்த்தாலும்
உன்பெயரின் நேசமடா

வேரறுந்த வெள்ளரசாய்
விழுந்து கிடக்கின்றோம்
வேதனையில் வெந்து மனம்
விம்மி இங்கு வாடுகின்றோம்

ஓய்வு நாள் நெருங்குதென்று
நீ இதைத்தான் சொன்னாயா
சாய்ந்துவிடப் போவதையா
சூசகமாய்ச் சொன்னாய் நீ

மென்னடையும் மென்சிரிப்பும்
மென்கதையும் மின்னி மின்னி
கண்மணிக்குள் வந்து வந்து
கதைகதையாய்ச் சொல்கிறதே

எந்நேர மானாலும்
அழைப் பெடுத்துக் கேட்டாலும்
"வாருங்கள்" என்று
வாஞ்சையுடன் சொன்னதெல்லாம்
காதோரம் வந்து வந்து
கதைகதையாய்ச் சொல்கிறதே

புண்ணான நெஞ்சுக்குப்
புன்னகையை முன்கொடுப்பாய்
பின்னாடித்தானே
மாத்திரையை நீதருவாய்

எதை எழுதிக் கொடுத்தாலும்
துட்டெடுக்காத் துரைமகன் நீ
ஊரே கதைக்கிறதே
உண்மைதான் என்செய்வோம்

பிறசறினைப் பார்ப்பாய்
பில் (bill) கொடுக்க மாட்டாய்
"குழல்" பிடித்துச் சோதிப்பாய்
கொடுப்புக்குள் நீ சிரிப்பாய்
"ஒன்றுமில்லை" என்று
ஒத்தணமாய் நீ கதைப்பாய்

ஊரே ஒதுங்கி வந்து
உன் கப்றில் மண்போட்டு
உயர்த்தி இருகரத்தை
உனக்காகப் பிரார்த்தித்த
மாலைப் பொழுததனை
மனத்திரையில் எடுத்தெடுத்து
மாவிளக்காய் பார்ப்போம்
மாமகனே உன்நினைவை
மறக்காது வாசிப்போம்

கடின மொழி பேசாத
காருண்ய மானவனே!
பொடி வைத்துக் கதையாத
பொன்மனத்துச் சந்தனமே!

மௌன மொழி பேசி
மனம் நிறைத்த மாதுரமே
மாயை உலகை விட்டு
மறுவுலகில் புகுந்து விட்டாய்

மனைவி மக்கள் குடும்பம்
மற்றும் உறவினர்க்கு
ஆறுதலைச் சொன்னோம்

எங்கள் இதயக் கமலமெலாம்
எப்போதும் இடம் உனக்கு
நீங்காது நீ இருப்பாய்
நேசமணி நித்திலமே!

மேலான சொர்க்கத்தில்
முன்னிருக்க வேண்டும் நீ
ஏந்தி இருகரத்தை
இறைஞ்சுகிறோம் இறையவனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்ணிலா

ISSN 2792 - 1050

காலாண்டிதழ்.
QUARTERLY.

வெண்ணிலா - கவிதை மஞ்சரி.
VENNILA - Poetry Inflorescence.


எம்.வை.எம். முஸ்லிம்


எம்.ஐ.எம். முஸம்மில்


நியாஸ் ஏ ஸமத்


எம்.ஸி.எம். சுபைர்


ஐ.ஏ. சத்தார்



ஏ.எம்.கஸ்புள்ளா

ஒவ்வொரு இதழும்
ஒரு கவிதைத் தொகுதி.

மூன்றாவது ஆண்டு
10

இதழ்: 10 - ஜூலை 2023. விலை: ரூபா. 50/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Jesa Grafix

## Graphic Designing & Printing

***No. 289, Main Street, Maruthamunai***

**PHOTOCOPY**
**TYPESETTING**
**GRAPHIC DESIGNING**
**OFFSET PRINTING, LAMINATING**
**BINDING, STATIONARY**
**PHONE CARDS**
**RELOADS**
**&**
**MUCH MORE SERVICES**
**at Cheapest rates.**

# 075 656 9393

**jesagrafix24@gmail.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலாண்டிதழ்

# வெண்ணிலா

வெண்ணிலா - கவிதை மஞ்சரி.
VENNILA - Poetry Inflorescence

ISSN 2792 - 1050

**மூன்றாவது ஆண்டு - இதழ்: 10 - ஜூலை 2023.**

வாசிப்பை மேம்படுத்துவதும், புதிய பல கவிஞர்களை உருவாக்குவதுமே எமது நோக்கம்.

**ஆசிரியர்:**
**கவிஞர் எஸ் ஏ கப்பார்**
kavignarsagaffar@gmail.com

முகவரி:
**378/2, ஸம் ஸம் வீதி,**
**மருதமுனை - 03 # 32314,**
**இலங்கை.**

**மின்னஞ்சல்:**
vennilakavithaimanjari@gmail.com
**தொடர்பு:**
07 5858 5656 / 077 6968697.
**வட்ஸ்அப்:** 077 6968671.

•••

**Digital Printing:**
S. A. Jezeem, Jesa Grafix,
Main Street, Maruthamunai.

**Information Technology:**
A. G. Afraan Muhammed
(University of Ruhuna.)

**Layout Design:**
S. A. Abdul Gaffar DICP, DIHE & DIEC

**Published by:**
Digital Information System (DIS)

•••

**சந்தா விபரம்:**
தனி இதழ் ரூபா. 50/=
தபாலில் பெற ரூபா. 150/=
ஆண்டுச் சந்தா ரூபா. 600/=

வங்கி மூலம்:
இலங்கை வங்கி, கல்முனை.
கணக்கிலக்கம் 6106068
(எஸ். ஏ. அப்துல் கப்பார்)

## உள்ளே...

**கட்டுரைகள்: [ 7, 12, 16 ]**
- எழுத்தாளர் எம். ஐ. எம். முஸம்மில்
- எழுத்தாளர் கவிச்சுடர் ஏ.எம்.கஸ்புள்ளா
- எழுத்தாளர் ஐ. ஏ. சத்தார்

**தடம்பதித்த மூத்த கவிஞர்கள்: [ 25 ]**
- கவிஞர் நியாஸ் ஏ ஸமத்

**மொழிமாற்றப்பட்ட கவிதைகள்: [ 26 ]**
- கவிஞர் நழீம் ஹனீபா

**சிறப்புக் கவிதை: [ 27 ]**
- கலாபூஷணம் பி. எம். எம். ஏ. காதர்

**மஞ்சரி கவிதைகள்: [ 28 ]**
- Dr. ஜலீலா முஸம்மில்
- செம்மைத்துளியான்
- பாத்திமா ஸஃபா
- எழுகவி
- ஹப்ஸா பஹ்மீர்
- மாஹிறா ஹமீட் அஸ்ஹர்
- அலியார் TO
- ஏ. ஆர். அப்துல் றஸூல்
- இமையி
- ஒலுவில் எஸ். ஜலால்டீன்
- க. ஷியா
- எம். எச். ஏ. கரீம்
- காரையன் கதன்
- ஷியாம்
- டீன் கபூர்
- ஹுமதா ஏ கப்பார்

**படித்தவற்றில் பிடித்தவை: [ 45 ]**
- அஷ்ரஃப் சிஹாப்தீன்
- கவி செல்வா
- வி. அபிவர்ணா
- வானம்பாடி முஜா

**முகநூல் பதிவு: [ 49 ]**
- கவிஞர் மருதமுனை ஹஸன்

**அட்டையில்:**
- மர்ஹூம் எம். வை. எம். முஸ்லிம்
- எழுத்தாளர் எம். ஐ. எம். முஸம்மில்
- கவிஞர் நியாஸ் ஏ ஸமத்
- மர்ஹூம் எம். ஸி. எம். சுபைர்
- எழுத்தாளர் ஐ. ஏ. சத்தார்
- கவிச்சுடர் ஏ. எம். கஸ்புள்ளா

**சிறப்பு அட்டையில்:**
- கவிஞர் அபூ முஜாஹித்
- மர்ஹூம் Dr. எஸ். ஏ. ஜஹ்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்ணிலா
வெண்ணிலா - கவிதை மஞ்சரி.
VENNILA - Poetry Inflorescence.
இதழ்: 10 - ஜூலை 2023.

# வருந்துகிறோம்.

**வெண்ணிலா** கவிதை மஞ்சரியின் சிரேஷ்ட ஆலோசகரும் முதலாவது சந்தாத்தாரருமான வைத்தியர் எஸ். ஏ. ஜஹ்பர் M.B.B.S. (Colombo), (MO, Clinical Microbiology) அவர்கள் சில நாட்கள் சுகயீனமுற்றிருந்து, தான் கடமைபுரிந்த கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் 28-05-2023 அதிகாலை மரணித்த செய்தி மக்கள் மத்தியில் ஆறாத் துயரானது.

**வெண்ணிலா** கவிதை மஞ்சரியின் ஒவ்வொரு இதழின் வருகைக்கு ஓரிரு நாட்களுக்கு முன் 'புத்தகம் வந்துவிட்டதா?' என கரிசனையுடன் வினவுவார். மஞ்சரி வெளிவந்தவுடன் நேரடியாச் சென்று ஒப்படைப்பேன். முதலில் அட்டையின் நான்கு பக்கங்களையும் பார்த்துவிட்டு, ஏனைய பக்கங்களை நோக்கும்போது ஆளரவம் கேட்டு நிமிர்ந்து பார்ப்பார். எனக்குப் புரிந்துவிடும். 'நாளை வருகிறேன்' எனக் கூறிவிட்டு எழுந்துவிடுவேன்.

அவரது அக்கறையெல்லாம் தினசரி தன்னை நம்பி நாடிவரும் ஏழை, எளியவர்கள் பற்றியதுதான்.

அன்னாரின் நினைவாக, அவரது நண்பர் கவிஞர் **அபூ முஜாஹித்** அவர்களது கவிதையுடன் நான்கு பக்கங்கள் கொண்ட சிறப்பு அட்டையை **வெண்ணிலா** கவிதை மஞ்சரி வெளியிட்டு மரியாதை செலுத்துகிறது.

**- இதழாசிரியர்.**

இவ்விதழில்...

- **'தடம்பதித்த மூத்த கவிஞர்கள்'** தொடரில் வெண்பா இயற்றுவதில் வல்லவரான மரபுக் கவிஞர் **நியாஸ் ஏ ஸமத்** (பொறியியலாளர்) அவர்களைக் கௌரவிக்கும் முகமாக அவரது **'மௌனித்தாயேன்?'** கவிதை இடம்பெறுகிறது.

- **கலாபூஷணம் பி. எம். எம். ஏ. காதர்** அவர்கள் தந்தையர் தினத்தையொட்டி தன் தந்தைக்காக மனமுருகி வடித்த **'என்னை வாழ வைத்த தந்தை'** சிறப்புக் கவிதை.

- **சிறுகதை எழுத்தாளர் எம்.ஐ.எம். முஸம்மில்** அவர்களின் **'மருதமுனையில் பிறந்த அல்ஹாஜ் எம்.வை.எம்.முஸ்லிம் நாடறிந்த கல்விமான் மட்டுமல்ல நல்லதொரு சொற்பொழிவாளர், கவிஞர், எழுத்தாளர்'** சிறப்புக் கட்டுரை.

- **கவிச்சுடர் ஏ. எம். கஸ்புள்ளா** அவர்களின் **'எழுதுவோம் கவிதை'** கட்டுரை, மரபுக் கவிதை எழுதத் துடிக்கும் கவிஞர்களுக்கு மரபுக் கவிதை இலக்கணம் பற்றி சிறப்புற எடுத்தியம்புகிறது.

- **எழுத்தாளர், கவிஞர் ஐ. ஏ. சத்தார்** அவர்களின் **'மணிக்குரல் எம்.ஸீ.எம். சுபைர்'.** இக்கட்டுரை ஓர் ஆவணப் பதிவாகத் தடம் பதிக்கிறது.

- **'மஞ்சரி கவிதைகள்'** பகுதியில் முத்தான 16 கவிதைகள்.

- **'படித்தவற்றில் பிடித்தவை'** பகுதியில் மனதை வருடிய 4 கவிதைகள்.

- **'முகநூல் பகுதி'** இல் கவிஞர் மருதமுனை ஹஸன் அவர்களின் மனதை உருக்கும் ஒரு பதிவு.

இன்னும் பல...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனையில் பிறந்த

# அல்ஹாஜ். எம். வை. எம். முஸ்லிம்

## நாடறிந்த கல்விமான் மட்டுமல்ல நல்லதொரு சொற்பொழிவாளர், கவிஞர், எழுத்தாளர்.

**– எம். ஐ. எம். முஸம்மில் –**
*ஓய்வுபெற்ற உள்நாட்டு இறைவரி ஆணையாளர்.*



அல்ஹாஜ்.
எம். வை. எம். முஸ்லிம்.

மத்திய மாகாணத்தில் ஆசிரியராக தனது முதல் நியமனத்தைப் பெற்றுக்கொண்ட அல்ஹாஜ் எம்.வை.எம்.முஸ்லிம் அவர்கள் அதிபர், உதவிக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர், மேலதிகக் கல்விப் பணிப்பாளர், பணிப்பாளர் ஆகிய பதவிகளின் மூலம் இன, மத, மொழி பேதமின்றி கல்விச் சேவை புரிந்த ஒரு பெருந்தகையாவார். அதுமட்டுமன்றி கடந்த மூன்று தசாப்தங்களாக மகரகம தேசிய கல்வி நிறுவகம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் ஆகியவற்றின் விரிவுரையாளர், இணைப்பாளர் ஆகிய மேலதிக பதவிகளையும் வகித்து ஆயிரக் கணக்கான பட்டதாரி ஆசிரியர்களின் திறமைகளை வளர்த்தெடுத்த ஒரு மனிதாபிமானமிக்க கல்விமான்.

1935.09.01 ஆந் திகதி கிழக்கு மாகாணத்தின் மருதமுனைக் கிராமத்தில் ஏ. எல். எம். யூசுப்லெப்பை - மீராலெப்பை உம்மு ஹபீபா தம்பதிக்கு மூன்றாவது பிள்ளையாகப் பிறந்த இவருக்கு நான்கு சகோதரர்கள், இரண்டு சகோதரிகள், அல்ஹாஜ் எம்.வை.எம்.முஸ்லிம் அவர்களின் பிள்ளைகளும், மற்றும் அவரது சகோதரங்களினதும், நெருங்கிய உறவினர்களினதும் பிள்ளைகளும், உறவினர்களும் கல்வித்துறை, மருத்துவத்துறை, சட்டத்துறை, பொறியியல்துறை, வங்கித்துறை போன்ற பல்வேறு துறைகளிலும் பிரகாசித்து விளங்குகின்றமை குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது ஆரம்பக் கல்வி தொடக்கம் சிரேஷ்ட தராதரப் பத்திர பரீட்சை சித்தியடையும் வரை தற்போதைய மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் (அப்போதைய மருதமுனை வடக்கு ஆண்கள் பாடசாலை) கல்வி பயின்ற எம்.வை.எம்.முஸ்லிம் அவர்கள் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியர் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து 1956.05.21ஆம் திகதி கண்டி, மல்வானஹின்னை முஸ்லிம் மகா வித்தியாலயத்துக்கு நியமனம் பெற்றார். பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகத்திற்கு உள்வாரி மாணவராகச் சென்று கலைப் பட்டதாரியாக பரிணமித்தார்.

அல்ஹாஜ் எம்.வை.எம்.முஸ்லிம் அவர்கள் தனது முதற் சம்பளத்தில் தனது குடும்பத்தில் இருந்த எல்லா மாணவர்களுக்கும், மற்றும் தனது வீட்டு அயலிலிருந்த ஏனைய மாணவர்களுக்கும் பாலபோதினி, சூழல் ஆகிய பாடப்புத்தகங்களையும், கற்பலகை, கற்கூர், கொப்பி, பென்சில் போன்ற எழுதுகருவிகளையும் வாங்கி அன்பளிப்புச் செய்தமையை அவரது சகோதரி எம்.வை.மைமூனா அவர்கள் சிரித்த முகத்துடன் என்னிடம் நினைவு கூர்ந்தார்.

1961ஆம் ஆண்டு மே மாதம் கண்டி, கட்டுகஸ்தோட்டையைச் சேர்ந்த ஆசிரியை ஹலால்தீன் மர்ஜுன் என்பவரைத் திருமணம் செய்ததைத் தொடர்ந்து அன்னாரது வாழ்க்கையும் வதிவிடமும் மத்திய மாகாணத்தில் நிரந்தரமாகின.


அல்ஹாஜ் எம்.வை.எம்.முஸ்லிம் அவர்கள் திறமையான மாணவனாக பிரகாசித்ததாக அப்போது அவர் கற்ற பாடசாலையில் பாலர் வகுப்பொன்றில் கல்வி கற்றுக்கொண்டிருந்த மாணவரும் ஓய்வுபெற்ற மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியின் அதிபர்களிலொருவருமான அல்ஹாஜ் ஏ.எல். மீராமுகைதீன் அவர்கள் குறிப்பிடுகின்றார். தனது சிரேஷ்ட மாணவர்களான எம்.வை.எம்.முஸ்லிம், எம்.ஐ.எம்.அமீன் (காலஞ்சென்ற ஓய்வுபெற்ற வட்டாரக் கல்வி அதிகாரி) ஆகிய இருவரும் அகில இலங்கை ரீதியாக கொழும்பு சோனக இஸ்லாமிய கலாச்சார நிலையத்தினால் நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றிருந்ததாகவும், அதனைப் பாராட்டி அவர்களுடன் அதே வகுப்பில் கற்றுக்கொண்டிருந்த மாணவராகிய காலஞ்சென்ற பிரபல எழுத்தாளர் மருதூர்க் கொத்தன் வீ.எம்.இஸ்மாயில் (அதிபர்) அவர்களின் தலைமையில் மருதமுனையில் அமைந்திருந்த சன சமூக நிலைய கட்டிடத்தில் ஊர்மக்கள் சேர்ந்து பாராட்டு விழாவொன்றை நடாத்தியதாகவும் அதில் தானும் பார்வையாளனாக கலந்துகொண்டதாகவும் தனது மாணவக்கால நினைவுகளை பகிர்ந்துகொள்கின்றார் ஓய்வுபெற்ற அதிபர் அல்ஹாஜ் ஏ.எல்.மீராமுகைதீன். அல்ஹாஜ்.எம்.வை.எம்.முஸ்லிம் அவர்கள் 1950களில் பல தனிக் கவிதைகளை யாத்தவர். 1955ஆம் ஆண்டுகளில் அவரது வகுப்புத் தோழன் காலஞ்சென்ற பிரபல எழுத்தாளரும் ஓய்வுபெற்ற அதிபருமாகிய மருதூர்க் கொத்தன் வீ.எம்.இஸ்மாயில் அவர்களுடன் சேர்ந்து 'மருதம்' எனும் கையெழுத்துப் பத்திரிகையை நடாத்தியவர். மருதமுனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலிபர் முன்னேற்றக் கழகத்தினால் 1959ஆம் ஆண்டில் மருதமுனை பொது நூல் நிலையம் ஆரம்பிக்கப்பட்ட போது அவற்றின் நிருவாகக் குழுக்களில் அங்கத்துவம் வகித்தவர். அக்காலப் பகுதியில் தேசிய பத்திரிகைகளுக்கு பிராந்தியச் செய்திகளை அனுப்பியவர்.

இந்தத் திறமைகளும் அனுபவங்களும் தான் அவரை தான் கற்பித்த பல பாடசாலைக் கீதங்களை இயற்றச் செய்ததுடன் சில பாடசாலைகளுக்கு பொருத்தமான பெயர்களைத் தெரிவு செய்யவும் வழிவகுத்தன, ஒரு சிறந்த சொற்பொழிவாளராக மிளிரச் செய்தன. 1979ஆம் ஆண்டு நபித்தோழர் முஸ்அப் இப்னு உமைர் அவர்களின் தியாகங்களை எடுத்தியம்பும் 'இறவாச் செல்வம்' எனும் கவிதைத் தொகுப்பினை வெளியிட்டுள்ளார். பல நூல் வெளியீட்டு விழாக்களை தலைமை தாங்கி நடாத்தியதோடு பல இலக்கிய, கல்விச் சொற்பொழிவுகளையும் மேற்கொண்டு பார்வையாளர்களின் மனங்கவர்ந்தவர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் இலக்கிய மஞ்சரிக்கு பல பங்களிப்புக்களை செய்தவர். இவரது படைப்புக்களான இலக்கிய ஆய்வுக் கட்டுரைகள், கவிதைகள் தினகரன், தினபதி, வீரகேசரி, சுதந்திரன் ஆகிய பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளன. கல்வி அமைச்சினால் தேசிய ரீதியில் நடாத்தப்பட்ட சிறுகதை, கட்டுரைப் போட்டிகளுக்கு நடுவராகக் கடமையாற்றியுள்ளார்.

நான் எட்டாம் வகுப்பில் கற்றுக் கொண்டிருந்தபோது 1967ஆம் ஆண்டு என் தந்தையுடன் கண்டிக்குச் சென்றிருந்த வேளை அல்ஹாஜ் எம்.வை.எம்.முஸ்லிம் அவர்களை முதற் தடவையாகச் சந்தித்துள்ளேன். அன்று தொடக்கம் அவர்கள் இறையடியெய்துவதற்கு சொற்ப காலத்துக்கு முன்பு வரை அவரை நேரில் சந்தித்து பல முறை அவருடன் உரையாடக் கிடைத்தமையை ஒரு பாக்கியமாகக் கருதுகிறேன்.




அல்ஹாஜ். எம்.வை.எம். முஸ்லிம் அவர்கள் வெளியிட்ட கவிதை தொகுப்பின் முகப்பு அட்டை.

கண்டி, இந்து கலாச்சார மண்டபத்தில் நடந்த ஒரு கூட்டத்திலும், மற்றும் கண்டி,


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பெண்கள் உயர் பாடசாலையில் நடைபெற்ற இன்னொரு கூட்டத்திலும் அல்ஹாஜ் எம்.வை.எம்.முஸ்லிம் அவர்களின் சொற்பொழிவுகளை தான் நேரில் கேட்டதாகவும் அவரது பேச்சுத் திறமையைக்கண்டு தான் பிரமிப்படைந்ததாகவும் கூறுகின்றார் ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தரும் தற்போதைய கண்டி "றிங்ஸ்" வியாபார நிலையத்தின் உரிமையாளருமான திரு. கே. வையாபுரி.

அக்குறணை அல்-அஸ்ஹர் மத்திய மகா வித்தியாலயம், மடவளை மதீனா மத்திய கல்லூரி, உடுதெனிய முஸ்லிம் மத்திய கல்லூரி, மாத்தறை, வெலிகம அறபா மத்திய கல்லூரி, மல்வானை அல்-முபாறக் மத்திய கல்லூரி, குருணாகல், கெக்குணுகொல்ல முஸ்லிம் மத்திய கல்லூரி ஆகியவற்றின் அதிபராக கடமையாற்றி மாணவர்களை கல்வியின்பால் ஈர்க்கச் செய்ததுடன், தனக்குக் கீழ் கடமையாற்றிய ஆசிரியர்களுடன் நட்பாகவும், பண்பாகவும், கண்டிப்பாகவும் நடந்து தான் ஒரு கடமை வீரன், சாதனை வீரன் என்பதை நிரூபித்தவர் அல்ஹாஜ்.எம்.வை.எம்.முஸ்லிம் அவர்கள். கெலிஓய, கழுகமுவ, கலகெதர, பறகஹதெனிய, சித்திலெப்பை மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலும் கடமையாற்றியுள்ளார்.

குருணாகல், கெக்குணுகொல்ல முஸ்லிம் மத்திய கல்லூரியில் அல்ஹாஜ் எம்.வை.எம்.முஸ்லிம் அவர்கள் அதிபராக இருந்தபோது அவரது கம்பீரத் தோற்றம், கண்டிப்பு காரணமாக அவரை "சிங்கம்" என்று கௌரவமாக அழைத்ததாக சமூக வலைத்தளத்தில் பதிவிட்டிருந்தார் அவரது மாணவியாகிய ஒரு ஆசிரியை.

தனது சேவைக்காலத்தில் வெளிநாடுகளுக்கு சென்று பெற்ற அனுபவங்களை கல்வித்திட்டமிடலுக்கும், தமது முகாமைத்துவத்துக்கும் பிரயோகித்து வெற்றி கண்டார். அல்ஹாஜ்.எம்.வை.எம்.முஸ்லிம் அவர்கள் தான் பிறருக்குச் செய்யும் உதவிகளை மறந்துவிடும் அதேவேளை பிறர் தனக்குச் செய்த ஒரு சிறு உதவியையேனும் மறக்காமல் வாழ்ந்த பண்பாளர்.

இவரது மூன்று மகன்மாரில் இருவர் பிரபல வங்கிகளில் முகாமையாளர்களாகவும் ஒரு மகன் பிரபல கம்பனியொன்றில் முகாமையாளராகவும், இவரது மகள் சிரேஷ்ட அரசாங்க வைத்திய அதிகாரியாகவும் கடமையாற்றுகின்றனர். 2023.04.06 ஆந் திகதி கண்டியில் காலமான இவருக்கு எல்லாம்வல்ல அல்லாஹ் "ஜன்னத்துல் ஃபிர்தௌஸ்" எனும் சுவர்க்கத்தை வழங்குவதோடு, இவரது பிரிவால் துயருற்றிருக்கும் இவரது அன்பு மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள் அனைவரதும் கவலைகளையும் போக்குவானாகவும்.

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்ஹாஜ். எம். வை. எம். முஸ்லிம் அவர்களின்

## "இறவாச் செல்வம்"

**நூலிலிருந்து இரு வெண்பாக் கவிதைகள்.**

ஒன்றுஇறை யொன்றுகுல மெல்லா மொன்று
ஒன்றுக்குள் ளொன்றாகும் யாவும் மண்ணில்
இன்றெமது நல்வாழ்வு நாளை இல்லை
இறப்புண்டு நிச்சயமாம் இந்த வையம்
நன்றல்ல நீண்டவழித் தூரஞ் செல்வோன்
நடந்தகளைப் பாறிடவே தங்குஞ் சாலை
என்றெல்லாம் போதித்த நபிகள் போதம்
எண்டிசையு முலாச்சென்று உயர்ந்த வேளையிலே.

நெல்லி லரிசி மணிதந்து
நெருப்பிற் சூடு மழைநீரால்
புல்லும் வாழும் வழிகாட்டிப்
புவியைப் புரக்கு மென்றிறைவன்
கல்லின் தேரை கருப்பையுயிர்
காக்கும் பணியைச் செய்திடுவோன்
இல்லை யென்றா லுலகமிலை
இறையோனென்னைக் காப்பானே.



கண்டியில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவொன்றில் அல்ஹாஜ். எம்.வை.எம்.முஸ்லிம் தலைமை வகிக்க அருகில் காலஞ்சென்ற மணிப்புலவர் மருதூர்.ஏ.மஜீத் (பிரதிக் கல்விப் பணிப்பாளர்) அமர்ந்திருக்கின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதுவோம் கவிதை

கவிச்சுடர்

## ஏ எம் கஸ்புள்ளா

இலக்கியம் பற்றிய வரையறைகள் பலவாகப் பெருகிய நிலையில் கவிதைகள் பற்றிய எண்ணங்களும் பேசுபொருள்களும் வளர்ச்சி யடைந்துள்ளன. ஆரம்பத்தில் மரபுக் கவிதை, புதுக்கவிதை என்ற பகுப்பே இருந்து வந்தது. இன்று அது பலவாக மாற்றம் கண்டுள்ளது.

மரபுக் கவிதை இலக்கணம் உடையது. இலக்கண வரம்பை மீறுவது புதுக்கவிதையாகும்.

அதனை கவிஞர் வைரமுத்து ஒரு திரைப்பட பாடலில் இவ்வாறு எழுதியுள்ளார்.

**'நமது கதை புதுக்கவிதை**
**இலக்கணங்கள் இதற்கு இல்லை'**
என்பதை ஞாபகப் படுத்தியவனாக,

பொதுப் பார்வையில் கவிதை என்பது கற்பனை, உணர்ச்சி ஆகியவற்றின் மொழியாகும் என்கிறார் ஹாஸ்லிட்.

கவிதை என்பது கற்பனையின் விளக்கம் என்கிறார் ஷெல்லி.

கவிஞனின் உள்ளத்தில் இருந்து பொங்கி வழியும் உணர்ச்சியே கவிதை என வோர்ட்ஸ் வோர்த் குறிப்பிடுகின்றார்.

கோல்ரிட்ஜின் கருத்துப்படி கவிதை என்பது அறிவியலின் மறுதலையாகும். அதன் உடனடி நோக்கம் உண்மையைக் காட்டு வதன்று, இன்பம் வழங்குவ தேயாகும்.

இவ்வாறு கவிதை பற்றி மேல்நாட்டு அறிஞர்கள் குறிப்பிட்டுச் சொல்வது போல் நம் தமிழ்க் கவிஞர்களும் கூறாமலில்லை. அதில் நன்னூ லார், கம்பர், கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை போன்றோர் முக்கியமானவர்களாகும்.

பொருளழகுடனும் சொல்லழ குடனும் புலவர்களின் இயற்றும் திறனே இன்று வரை இலக்கிய உலகம் மிகுந்த பாராட்டைப் பெற்று வருவதற்கு செய்யுள் இலக்கியமே காரணமாக அமைந்துள்ளது என்பதை மறுக்கமுடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் அடிப்படையில் இங்கு மரபுக் கவிதை எழுதுவது பற்றி எழுதலாம் என்று தெரிந்ததை எழுதுகிறேன்.

மரபுக் கவிதை என்பது செய்யுள் இயற்ற அடிப்படையாக அமைந்த எழுத்து தனித்தும் சேர்ந்தும் பொருளை வெளிப்படுத்தும் நிலையில் அசையாக, சீராக, தளையாக, தொடையாக பெயர் பெற்று ஒழுங்காக இவைகள் கட்டப்படுவதால் யாப்பு என்ற பொதுப் பெயரை பெறுகிறது. இந்த யாப்பு பற்றிய விதிமுறைகளை விளக்குவது அல்லது கூறுவது யாப்பிலக்கணமாகும்.

தமிழுக்கு யாப்பிலக்கணம் ஓர் அணிகலன் என்பதால் யாப்பருங்கலை எனவும் குறிப் பிடப்படுகிறது.

இதில் கூறப்பட்ட விதிகள் ஒரு பெண்ணைப் பார்த்துக் கூறுவது போல் உள்ளதால் **'யாப்பருங்கலக்காரிகை'** எனப் படுகிறது. இந் நூலின் ஆசிரியர் அமிர்த சாகரர் ஆகும்.

கவிதையில் யாப்பு உறுப்புகளாக எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பன காணப் படுகின்றன.

அவற்றைப் பார்ப்போம்.

**தொடைகள் எட்டாகும்.**

அவை எதுகை, மோனை, இயைபு, முரண், அளபெடை, அந்தாதி, இரட்டை, செந்தொடை எனும் எட்டும்.

**தொடை விகற்பகங்கள் ஏழாகும்.**

அவை இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று எனும் ஏழும்.

இலக்கண வாய்பாடு மூலம் பின்வரும் பாடலூடாக அசைகள், சீர் பற்றியும் அறிவோம்.

தேமா - தேமா - புளிமா - தேமா
...தேமா - புளிமா - தேமா.

– எழுசீர் ஆசிரிய விருத்தம் –

**கொட்டக் கொட்ட விழிக்கு மிந்தச்**
**...சிட்டுக் குருவி யாரு**
**வட்ட மிட்டு வளைக்கு மிந்த**
**...வட்ட நிலவு யாரு**
**பட்டுப் போலப் பருவம் இந்தப்**
**...பச்சை விளக்கு யாரு**
**கொட்டும் முரசு மனசுக் குள்ளே**
**...கோலம் வரைந்த தாரு**

பாடல்: கவிஞர் அகன்
(அநுராதா கட்டபொம்மன்)

மேலுள்ள பாடல் பின்வரும் இலக்கண வாய்ப்பாட்டில் இரண்டு அசைகளில் எழுதப்பட்டுள்ளது.

தேமா = நேர் + நேர்
புளிமா = நிரை + நேர்
இதனை மாச்சீர் எனவும் அழைப்பர்.

முதலில் அசை,சீர் பற்றி அறிவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சீர் என்பது**

இரண்டு அசைகள் சேர்ந்து சீராகும்.

ஓரசையே நின்று சீராவது ஓரசைச் சீராகும்.

நாள், மலர் என்ற வாய்ப்பாட்டால் இதை உணர்த்தலாம்.

**அசை என்பது**

தனித்தோ இன்னொரு எழுத்துடன் சேர்ந்தோ பொருள் தருவதும் பொருளை அசைக்கப்படுவதாலும் அசையானது.

அசையானது நேரசை, நிரையசை என இரண்டு வகைப்படும்.

**நேரசை என்பது**

தனிக் குறில் அல்லது தனி நெடில் தனித்தோ ஒற்றெழுத்துடனோ சேர்ந்து செய்யுளில் வரும்.

தனிக் குறில் - அ
தனி நெடில் - ஆ
ஒற்றெழுத்து - ட்
அல் - குறில் ஒற்று
ஆல் - நெடில் ஒற்று

நேரசைக்குரிய சொற்களை மேல் தரப்பட்ட பாடலில் இருந்து சிலவற்றை அறிவோம்.

கொட்ட, மிந்தச், யாரு, சிட்டு என இன்னும் பலவுண்டு. தேர்ந்து எழுதுவோம்.

நேர் என்பதை அடையாளம் காணும் போது அசைகள் பிரிப்பதனூடாக விளக்குவோம்.

"கொட்ட" என்பதை சீர் பிரிக்கும்போது இரண்டு அசைகள் வந்துள்ளன.

கொட்/ட
நெடிலும் ஒற்றெழுத்தும் அருகே தனிக் குறிலும் வந்துள்ளது. எனவே 'கொட்ட' என்பது நேரசையாகும்.

**நிரையசை என்பது**

இரு குறில் ஒற்றெழுத்துடனோ, குறில் நெடிலும் ஒற்றெழுத்துடனோ வருவதாகும்.

உதாரணம்:
மேல் பாடலிலிருந்து
உ+ம் விளக்கு என்பதில் அசைகள் இரண்டு வருகிறது.

விள - இரு குறில் - நிரையசை
க் - ஒற்று
கு - தனிக் குறில் நேர்
எனவே நிரை + நேர் = புளிமா இலக்கண வாய்ப்பாடாகும்.

இன்னும்

படு - இருகுறில்
படா - குறில் நெடில்
படம் - இருகுறில் ஒற்று
படாம் - குறில் நெடில் ஒற்று

மேல் தரப்பட்டவை நான்கு வகையான நிரையசைக்குரிய எடுத்துக்காட்டாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துக்களில் காணப்படும் குறில், நெடில், ஒற்று என்பவைகளை வைத்தே பாடல் நேரசைச் சீரா அல்லது நிரையசைச் சீரா என்று அடையாளம் காணலாம். இலக்கண வாய்ப்பாடுகள் பற்றியும்,

**ஈரசைச் சீர்**

இரண்டு அசைகளானது பின்வரும் வாய்ப்பாட்டில் வரும் நான்கும் ஆசிரிய உரிச்சீராகும்.

நேர் + நேர் = தேமா
நிரை + நேர் = புளிமா
நிரை + நிரை = கருவிளம்
நேர் + நிரை = கூவிளம்

**மூவசைச் சீர்**

நேரசையை இறுதியாக உடைய வாய்ப்பாட்டில் தொடங்கும் மூவசைச் சீர் நான்கும் வெண்பா உரிச்சீராகும். இதனை காய் சீர் என அழைக்கப்படும்.

நேர்+நேர்+நேர் = தேமாங்காய்

நிரை +நேர்+நேர் = புளிமாங்காய்

நிரை +நிரை+நேர் = கருவிளங்காய்

நேர்+நிரை +நேர் = கூவிளங்காய்

நிரையசையை இறுதியாக உடைய பின்வரும் மூவசைச் சீர் நான்கும் வஞ்சி உரிச்சீர் எனப்படும். கனிச் சீர் எனவும் அழைக்கப்படும்.

நேர்+நேர்+நிரை = தேமாங்கனி

நிரை+நேர்+நிரை = புளிமாங்கனி

நிரை+நிரை+நிரை = கருவிளங்கனி

நேர்+நிரை+நிரை = கூவிளங்கனி

**நாலசைச் சீர்**

நேர் + நேர் + நேர் + நேர்
= தேமாதண்பூ

நேர் + நேர் + நிரை + நேர்
= தேமா நறும்பூ

நேர் +நேர் + நேர் + நிரை
= தேமா தண்நிழல்

நேர் + நேர் + நிரை + நிரை
= தேமா நறுநிழல்

மேற்படி நான்கு அசையினால் அமைந்தது பொதுச் சீராகும். அவை தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் ஆகிய வாய்ப்பாட்டுடன் தண்பூ, நறும்பூ, தண்நிழல், நறுநிழல் ஆகிய நான்கையும் ஒவ்வொன்றோடும் கூட்ட வரும் வாய்ப்பாட்டில் அமைந்தவையே பொதுச் சீராகும். இவ்வாறு நான்கு வாய்ப்பாடுகளுடன் சேர்க்கும் போது நாலசைச் சீர் 16 வரும்.

கவிதை எழுதும்போது நாலசைச் சீர்கள் வைத்துப் பாடுவது குறைவு. அவ்வாறு பாட நேரும் போதில் யாப்பிலக்கணப்படி அவை மூவசையாக எடுத்துக் கொள்ளப்படும்.

முடிவல்ல...

●●●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துக்கவிமணி, கவித்தாரகை, இலக்கியமணி, மலையகத்துக் கவிஞர்

# மணிக்குரல் எம். ஸி. எம். சுபைர்

## – ஐ. ஏ. சத்தார் –

நிலையிலா பொருட்செல்வத்தைவிட கல்விச் செல்வத்தைத் தமதாக்கி வாழும் "மலையகத்தின் தமிழகம்" என்று ஒரு காலத்தில் இலக்கிய மேதைகளால் வர்ணிக்கப்பட்ட கல்ஹின்னை கிராமத்தில் "பெரியவர்" என்று ஊர் மக்களால் அழைக்கப்பட்ட காஸீம் ஹாஜியார் தம்பதியின் இரண்டாவது மகனாக முஹம்மது சுபைர் அவர்கள், 1933.08.27இல் பிறந்தார். இன்று கல்ஹின்னை "அல்மனார் தேசியப்பாடசாலை" என்று அழைக்கப்படும், அன்றைய தமிழ்ப் பாடசாலையில், திரு எஸ். நல்லையா அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் தனது ஆரம்பக் கல்வியைத் தொடங்கினார்.

விளையும் பயிர் முளையில் தெரியும் என்பதற்கிணங்க, சிறு வயது முதல் அறிவிற்சிறந்து விளங்கியதோடு, செந்தமிழ்க் கவிகளையும், சிறுவர் கவிகளையும், நாட்டுப் பாடல்களையும் இயற்றுவதில் சிறப்புப் பெற்றிருந்தார். கற்கும் காலத்தில் அதிபர் திரு எஸ். நல்லையா அவர்களும், தமிழ் கற்பித்த பண்டிதர் குமரேசையர் அவர்களும் முஹம்மது சுபைர் அவர்களின் ஆற்றலையும், ஆர்வத்தையும் முறையாக நெறிப்படுத்தினர்.

பட்டங்களையும், பதவிகளையும் தம் பெயருக்கு முன்னே -தாங்களாகவே- போட்டுக் கொள்கின்ற ஒரு காலகட்டத்தில் கவிஞர் எம். ஸி. எம். சுபைர் என்ற பெயராலேயே ஊராரினாலும் மற்றவர்களாலுமே அவர் அழைக்கப்பட்டமை கவித்துறையில் அவர் மேல் மற்றையோர் கொண்ட கரிசனையையும் ஆதிக்கத்தையும் எடுத்துக் காட்டுகின்றது.

"கவிஞர்" என்றால் அது எம். ஸி. எம். சுபைர்தான் என்பது கிராமத்தவர்களின் ஆணித்தரமான நினைப்பாக இருந்தது. அன்னாரின் இடத்திற்கு இன்று வரை யாரும் வந்ததுமில்லை இனிமேல் வரப்போவதும் கேள்விக்குறியே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1950இல் சிரேஸ்ட தராதரப் பரீட்சையில் சித்தியடைந்து, 1952இல் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி சென்று அங்கு இரு வருடங்கள் பயின்று, தனது பதினேழாவது வயதில் இஸ்லாமிய இலக்கியத்தைக் கருப்பொருளாகக் கொண்டு, தான் இயற்றி வைத்திருந்த "மலர்ந்த வாழ்வு" என்ற ஆக்கத்தை தனது இரண்டாவது வருட முடிவில் சுய ஆக்க சமர்ப்பணமாக சமர்ப்பித்தார். மதிப்பீட்டுக்குப் பொறுப்பாயிருந்த உப அதிபர் திரு சம்பந்தன் எம். ஏ. அவர்கள் இக்கவிதைத் தொகுப்பு அச்சிட்டு வெளியிடப்பட்டால், மிகவும் பயனுள்ளதாயிருக்கும் என்று கூறிவைத்திருந்தார்.

அவர் தம் கவிதைகளிலுள்ள ஆற்றொழுக்கும், மொழிப்பற்றும், சிந்தனை முயற்சியும் பின்வரும் அவரின் கவிதையை படிக்கும்போது நன்கு புலனாகின்றது.

**சங்கம் வைத்துத் தமிழ் மொழி வளர்த்த**
**தமிழகம் இன்று தன்னகத் தடங்கிய**
**கலைகளும் இலக்கிய நூல்களும் தன்னுடைக்**
**கலாசாரங்களும் பண்பாடுகளும்**
**அழிந்து ஒழிந்தும் மறைந்திடு நிலைமையில்**
**அல்லலுற் றிருக்கும் அவலங் கண்டும்**
**அவற்றைச் சிறிதும் அறியார்போல**
**மேல் நாட்டவருடை மொழியினைக் கற்று**
**அம் மொழி வழியே நாமும் அவராய்**
**மாறிட நினைக்கின்றோம் மடமை! மடமை!!**
**தாய் மொழிப் பெருமை தளர்வதை நம்மாற்**
**சகித்தல் கூடுமோ தருமம் ஆகுமோ!**
**ஆதலின் அன்பீர் அன்போடு வேண்டினேன்**
**பிறமொழி யாவையும், பிழையறப் படித்துத்**
**தமிழ் மொழி தழைக்கத் தொண்டுகள் புரிமின்!**

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலிருந்து வெளியான கவிஞர், 1954இல் முதன் முதலாக பண்டாரவளை ஸாஹிரா வித்தியாலயத்திலேயே ஆசிரியராகப் பதவி ஏற்றார். தனக்குத் தமிழ் கற்றுத்தந்த தனது மதிப்பிற்குரிய ஆசான்களின் கோரிக்கையை மனதிற் கொண்டிருந்த கவிஞர், அங்கு பணிபுரியும் போதுதான், அதாவது 1956இல் தனது 23வது வயதில் "மலர்ந்த வாழ்வு" நூலை அச்சிட்டு வெளியிட்டார்.

தமிழ்ப்பற்றும், தமிழ்மேல் அவருக்கிருந்த வாஞ்சையும் கவிஞர் சுபைர் அவர்களின் கவிதைகளில் செறிந்துள்ளதாக நூலின் அணிந்துரையில் பேராசிரியர் திரு. கணபதிப்பிள்ளை அவர்கள் குறிப்பிடுகின்றார். அதேவேளை இந்நூல் பாடசாலைகளின் உப-பாடப் புத்தகமாக கல்வித்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்டமையானது இதன் தரத்திற்கான கட்டியத்தைக் காட்டி நிற்கின்றது.

தனக்குள்ளிருந்த கவித்துவத்தினதும், ஆற்றலினதும் தாக்கத்தைக் கொண்டு இளம் சந்ததியினரை கவியாக்கத்திலும், எழுத்துத்துறையிலும் ஈடுபடுத்த வேண்டும் என்ற நப்பாசையின் காரணமாக 1960இல் "மணிக்குரல்" என்ற பெயரில் மாதாந்த சஞ்சிகை ஒன்றைத் தொடங்கினார். இளைய சமுதாயத்துக்கென்று ஒரு தமிழ்ச் சஞ்சிகை உருவாக்கப்படவேண்டும் என்ற துணிவு யாழ்ப்பாணத்திலோ, மட்டக்களப்பிலோ, கொழும்பிலோ வாழ்ந்த ஒரு தமிழ் மகனுக்கு ஏற்படாத காலகட்டத்தில், கணிசமான சிங்களமொழி பேசுவோர் வாழ்கின்ற மலையகத்தின் பண்டாரவளையில் ஒரு பள்ளி ஆசிரியராக இருந்து கொண்டு நான்கு வருடகாலமாக "மணிக்குரல்" சஞ்சிகையை வெற்றிகரமாக நடாத்தியமை ஒன்றே போதுமானது அவருக்கு இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் சாஸ்வதமானதோர் இடத்தைப் பிடித்துக் கொடுக்க.

மணிக்குரல் களம் அமைத்துக் கொடுத்து, உருவாக்கிய எழுத்தாளர்களும், இலக்கியவாதிகளும் கல்விமான்களும் இன்றும் தமது எழுத்துக்களால் மக்களைத் தட்டியெழுப்பிக் கொண்டிருக்கின்றார்கள். தவிர, 18 வருட காலமாக இலக்கியத்தைத் துறந்திருந்த ஒரு பெருங்கவியான கவிஞர் அப்துல் காதர் லெப்பை அவர்களை, மீண்டும் கவித்துறைக்குத் தொண்டாட்டத் தூண்டிய பெருமையும் கவிஞர் சுபைர் அவர்களின் "மணிக்குரலை"யே சாரும்.

**வானொலிக் கலைஞர்:**

வானொலியில் வாய்ப்புக் கிடைப்பதென்பது அரிதாகவிருந்த ஒரு காலகட்டத்தில் வானொலி வாய்ப்பைப் பற்றியே அவர் சிந்திக்காத ஒரு நேரத்தில் திடீரென அந்த வாய்ப்பு அவரைத்தேடி பண்டாரவளை வரை சென்றதென்றால் அவரின் திறமையை என்னென்பது? அந்த வாய்ப்பின் மூலம் 1954ஆம் ஆண்டு ஜூன் 30ம் திகதி அவரால் நிகழ்த்தப்பட்ட கன்னி உரையானது, பின்னர் "சுதந்திரன்" பத்திரிகையில் கட்டுரையாக வெளிவந்து, கலைவாணிப் பதிப்பகத்தாரின் 6ஆம் வகுப்புப் பாடநூலான உமாவாசகத்தில் ஒரு பாடமாகக் கூடச் சேர்க்கப்பட்டது. அவரது உரையின் தரமும், கருத்துச் செறிவும் இதிலிருந்து புலனாகின்றது.

23 வயதைக்கூட எட்டியிராத காலகட்டத்தில் அவர் எழுதிய கட்டுரையானது, இவ்வளவு தரமுள்ளதாக இருந்தால், அறிவும் அனுபவமும் பெற்ற பின்னர் அவரால் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவுகள் எவ்வளவு உயர்வானவையாக விளங்கியிருக்கும் என்று மதிப்பிற்குரிய ஆசிரியர் ஏ. ஏ. எம் புவாஜி அவர்கள், கவிஞர் பற்றிய தனது நூலில் கேள்வி எழுப்பியுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1954இல் இலங்கை வானொலியில் அறிமுகமான பின்னர் வானொலிக்கென கவிதைகளையும், கவிதை நாடகங்களையும், வரலாற்று நாடகங்களையும், எழுதியதோடு மட்டுமல்லாது காலத்தின் தேவைக்கேற்ப சொற்பொழிவுகளையும் இலங்கை வானொலியில் நிகழ்த்தியுள்ளார். 1957இல் பெருமானார் (ஸல்) அவர்களின் நினைவு தினத்தையொட்டி இலங்கை வானொலி ஏற்பாடு செய்திருந்த கவிதா நிகழ்ச்சியில் "அண்ணல் நபி பிறந்தார்" என்ற மகுடத்தின் கீழ் அவர் படித்த கவிதையானது பெருமானார் (ஸல்) அவர்களின் பெருமையை தெளிவாகவும், இலகு கவிதாநயத்தோடும் எடுத்துரைப்பதாக அமைந்திருந்தது.

இலங்கை வானொலியின் வளரும் பயிர் நிகழ்ச்சிக்கு கவிதா நாடகங்களையும், சரித்திர நாடகங்களையும் எழுதியுள்ள அவர், 1961இல் இலங்கைப் பாடசாலைகளிலே இஸ்லாமிய இலக்கியம் அறிமுகப்படுத்தப்பட்டபோது, சீறாப்புராணம், முஹியத்தீன் புராணம், புதுகுஷ்ஷாம், இராஜநாயகம் போன்ற நூல்கள் பற்றியும், அவற்றை இயற்றிய புலவர்கள் பற்றியும் ஆற்றிய வானொலிப் பேச்சுக்கள் இஸ்லாமிய இலக்கியம் பற்றி அறிந்து கொள்ளத் துடித்த மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பெரும் துணையாக இருந்தன. இலங்கை வானொலியில் அவரால் பிரதியமைக்கப்பட்ட 1973 இல் "குறிஞ்சித் தேன்மலர்" என்ற நிகழ்ச்சியின் மூலமும் 1974 முதல் ஒலிபரப்பான "மருதமலர்" நிகழ்ச்சியின் மூலமும் பின்னர் "இலக்கிய மஞ்சரி" எனும் நிகழ்ச்சியின் மூலமும் வானொலி நேயர்கள் பெற்ற பயனோ அளப்பரியன. தவிர, இஸ்லாமிய கீதங்கள் பலவற்றை எழுதியும் நாற்பது வருட காலமாக இலங்கை வானொலிக்குத் தன் பங்களிப்பைச் செய்துள்ளார். இன்றும் கூட மலையகத்தின் சில பாடசாலைகளில் கவிஞர் சுபைர் அவர்கள் இயற்றிய கீதங்களே பாடசாலைக் கீதங்களாக இசைக்கப்படுகின்றன.

தமிழ் வளர்ச்சிக்கு வழி காட்டும் விதத்திலான ஏராளமாக கவிதைகளை கவிஞர் சுபைர் அவர்கள் இயற்றியுள்ளார்கள். "பலனென்ன கண்டீர் பாவலரே?" என்ற அவரின் கவிதையிலே தமிழ்ப்பற்றை வாசகர்களுக்கு ஊட்டிவிட்டு, தமிழ் வளர்ப்பிற்கு செல்வந்தர்களின் உதவி அறிஞர்களுக்குத் தேவை என்பதைக் குறிப்பிடுகின்றார்.

**அமுதம் விளையும் தமிழென்றும்**
**அரசர் காத்த தமிழென்றும்**
**தமிழர்க் குயிராம் தமிழென்றும்**
**தரணி முழங்கப் பாடிடுவீர்.**

**பழமைப் பெருமை பாடியதாற்**
**பலனென் கண்டீர் பாவலரே**
**பழமை போற்றிப் பண்புற்றுப்**
**புதுமைப் பனுவல் புரிவீரே.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுக் கலைகள் நிரம்பிடுநன்
னூல்கள் உண்டு பிறமொழியில்
திறமும் திருவும் படைத்தோரே
தமிழில் ஆக்கித் தருவீரே.

ஆற்றல் கொண்ட அறிஞர்கள்
ஆவல் கொள்வர் என்றாலும்
போற்றும் செல்வர் இன்மையாற்
பேசா தடங்கி வாழ்கின்றார்.

அருமைத் தமிழை வளர்த்திடுவோம்
புதுமைப் பூங்கா வாக்கிடுவோம்
தருமம் காக்கும் செல்வர்காள்
அறிஞர்க் குதவி செய்வீரே!

மலையகத்தில் பிறந்து மலையகத்திலே வாழ்ந்த கவிஞர் அவர்கள் தேயிலைத் தோட்டத் தொழிலாளர் பற்றிப் பாடிய கவிதையொன்று அவரின் மனித நேயத்தைப் பிரதிபலிக்கின்றது.



மணிக்குரல்
எம். ஸி. எம். சுபைர்.

தேயிலைத் தோட்டத்தில் - உடல்
தேய்ந்து தேய்ந்து துரும்பாகி மெலிந்திட
ஓய்வின்றி நாமுழைத்தோம் - மச்சான்
நோய்கண்டு தானிளைத்தோம் - உடல்
ஊறிச் சுரந்திடும் வேர்வைப் புனல் பாய்ச்சி
ஓங்கும் பயிர் வளர்த்தோம் - வளம்
தாங்கும் உயிர் கொடுத்தோம் - வரும்
சாவிலும் நாமிந்தத் தேயிலைக்கே - உரம்
ஆகப் புதைந்திடுவோம் - பெரும்
தியாகம் புரிந்திடுவோம்.

குழந்தைக் கவிஞர்:

சிறுவர் உணர்வுகளை அறிந்தவராகவும், மொழி வளம் உள்ளவராகவும், சிறுவர் உபயோகிக்கும் சொற்ப சொற்களை வைத்தே கவிதைகளை இயற்றக் கூடியவராகவும் இருக்க வேண்டியது ஒரு குழந்தைக் கவிஞருக்கான இலட்சணமென்றால், அவை அனைத்தும் கவிஞர் சுபைர் அவர்களிடம் அமைந்திருந்தன என்றே கூறவேண்டும். இந்தியக் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவுக்குச் சமனாக இலங்கையில் கவிஞர் சுபைர் ஒப்பிடப்படுகின்றார். அவர் சிறுவர்களுக்காக எழுதிய "மலரும் மனமும்", "எங்கள் தாய்நாடு" போன்ற கவிதைத் தொகுப்புக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைத் துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றன. அதுவுமல்லாது காலத்துக்குக் காலம் குழந்தைக் கவிதைகளை பத்திரிகைகள், வானொலி நிகழ்ச்சிகள் மூலம் வெளிப்படுத்தியிருக்கின்றார். 1977இல் அழ. வள்ளியப்பாவின் பாடல் தொகுப்பில் கவிஞர் சுபைர் அவர்களின் பாடலும் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1991ஆம் ஆண்டு தினகரன் வாரமஞ்சரியில் வெளிவந்த "கவிஞர் சுபைர் அவர்களின் பாலர் பாடல்கள்" என்ற விமர்சனக் கட்டுரையில் பேராசிரியர் தில்லைநாதன் அவர்கள், "பாலர்களுக்கு பாடல்களை இயற்றுவதென்பது இலேசான காரியமல்ல. அவர்களது சூழலையும் பகைப்புலத்தையும் செவ்வனே புரிந்து கொண்டு அவர்களுக்கு விளங்கும் வகையிலும் அவர்களைக் கவரும் வகையிலும் அவர்களுடைய ஆளுமை, சுயத்துவம், மொழிவளம், அறிவாற்றல், நல்லொழுக்கம், உலகத்தோடு ஒட்ட ஒழுகும் மனப்பாங்கு முதலானவற்றை வளர்க்கும் வகையிலும் அத்தகைய பாடல்கள் அமைவது பொருந்தும்" என்று பாலர் பாடல்களின் இலட்சணங்களைக் கோடிட்டுக் காட்டிவிட்டு, கவிமணி சுபைர் அவர்களின் பாலர் பாடல்களில் சமுதாயப்பிரக்ஞை, சமயப்பற்று, மொழிப்பற்று, நாட்டுப் பற்று, மனிதாபிமானம், பண்பாடு பேணும் ஆர்வம், விடுதலை வேட்கை என்பன ஒருசேர இருப்பதாகக் குறிப்பிடுகின்றார்.

**நாட்டுப் பாடல்கள்:**

நாட்டுப்பாடல்களின் தாயகம் என்று கருதப்பட்ட கிழக்கிலங்கையுடன் கவிஞர் சுபைர் அவர்களுக்கு மிகக் குறுகிய தொடர்பே இருந்தபோதிலும், அக்கால கட்டத்தில் வெளியான நாட்டுப் பாடல்களில் அவர் தம் உள்ளம் மயங்கி, தனது கற்பனை வளத்தைக் கொண்டு சொற்சித்திரங்கள் பலவற்றைத் தீட்டினார். அவை இலங்கைப் பத்திரிகைகளில் மட்டுமல்லாது, தென்னிந்திய, மலேசிய சஞ்சிகைகளிலும் வெளிவந்தன. பின்னர், அவற்றை ஒன்று சேர்த்து "கண்ணான மச்சி" என்ற பெயரில் 1969இல் நூலுருப்படுத்தினார். கள்ளமில்லா மக்களின் உள்ளத்து ஆசைகள், உணர்வுகள், ஊடல்கள், இக்கிராமியக் கவிதைகளின் தொகுப்பிலே படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளன.

**கட்டுரைகள் மூலம் இலட்சிய வேட்கை:**

கவிஞர் சுபைர் அவர்கள் வெறுமனே நுனிப்புல் மேயும் எழுத்தாளராக இருக்கவில்லை. இலட்சிய வேட்கை கொண்டவராகவே சமூகம் அவரை மதித்தது. அதற்குக் காரணம் வெறுமனே கவிதைகளை மாத்திரம் எழுதுவதில் நின்றுவிடாது, காலத்தின் தேவைக்கேற்ப கட்டுரைகளையும் அவர் எழுதிக்கொண்டிருந்தமையே. கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் எழுத்தாளனுக்கு அவனது கருத்துக்களை கோடிட்டுக் காட்ட உதவும். ஆனால் ஒரு கட்டுரையானது அவன் சமூதாயத்திற்குக் கூற விரும்பும் ஒட்டுமொத்தமான விசயங்களை சித்திரமாக சமூகத்தின் பார்வைக்கு எத்திவைக்க உதவும். இந்த வகையில்தான் அவரது கட்டுரைகள் அமைந்திருந்தன. காலத்தின் தேவைக்கேற்பவே அவர் கட்டுரைகளைப் பத்திரிகைகளுக்கும், வானொலிக்கும் எழுதிக் கொண்டிருந்தார்.

தமிழ் இலக்கியத்தின் மாண்பிலும், மாட்சியிலும் தன்னைப் பறிகொடுத்த கவிஞர் அவர்கள் தான் தமிழ் இலக்கியத்தில் கண்டெடுத்தவற்றை வாசகர்களோடு பகிர்ந்துகொள்வான் வேண்டி இஸ்லாமியத் தமிழ் புலவர்களையும் அவர் தம் கவிதைகளையும் தனது கட்டுரைகள் மூலம் வெளிப்படுத்தினார். ஒரு நல்ல கட்டுரையாளனுக்குரிய சகல தகைமைகளும் கவிஞரிடம் இருந்தமையால், அவரது கட்டுரைகள் அக்காலத்தில் பெரும் வரவேற்புப் பெற்றன.

தனது கட்டுரைகளினால் அவர் சாதித்தவைகள் பல. இதில் குறிப்பிடத் தக்கதாக அமைந்தமையாக அறிஞர்கள் பலருக்கு பாராட்டு விழாக்கள் ஏற்பாடுகளும், முத்திரை வெளியிட வைத்தமையும். கவிஞர் அப்துல் காதர் லெப்பை, பேராசிரியர் சு. வித்தியானந்தன் போன்றோருக்குப் பாராட்டு விழாக்களும், அறிஞர் சித்தி லெப்பை அவர்களுக்கு முத்திரை வெளியீடும் கவிஞரின் அயரா உழைப்பிலேயே நடந்தேறியது. இஸ்லாமிய இலக்கியத்தையும், இஸ்லாமியப் புலவர்கள் பற்றிய விபரங்கள் அக்காலப் பாடநூற்களில் சேர்க்கப்பட, இவரது கட்டுரைகளின் உந்துதலும் முக்கிய காரணமாக இருந்தது.

இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தின் செம்மையையும் செழுமையையும் பற்றி அறியாமை இருள் அகற்றும் புனித பணியில் பூரணமாக ஈடுபடாது, பொதுவாக நாமறிந்த புலவர்களைப் பற்றியே எழுதிக் கொண்டிருப்பதைவிட, உமருப் புலவர், சதாவதானி செய்குத் தம்பிப் பாவலர், அப்துல் காதர் நெய்னா லெப்பை ஆலிம் ஆகியோர் பற்றியும், அவர்களின் பாக்கள் பற்றியும் கட்டுரைகளை எழுதி தமிழ்பேசும் மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தினார். மகாகவி இக்பால் பற்றியும் அவர்தம் ஆக்கங்கள் பற்றியும் தனது கட்டுரைகள் மூலம் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தினார்.

வாசகர் பாராட்டுக்களினால் தூண்டப்பட்ட கவிஞர் சுபைர் அவர்கள், தனது வானொலி உரைகள், பத்திரிகை, சஞ்சிகைகளில் வெளிவந்த தனது கட்டுரைகளைத் தொகுத்து 1989இல் “இலக்கிய மலர்கள்” என்ற நூலை வெளியிட்டார். இதன் உள்ளடக்கமானது இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களையும், புலவர்களையும் அறிமுகப்படுத்துவதாக அமைந்தமையால், அவற்றைத் தேடிப்படிக்கும் ஆர்வத்தை மக்களுக்கு ஊட்டின.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உரையாசிரியர்:**

இலங்கையில் பரீட்சைக்காக அறிமுகப்படுத்தப்பட்ட சீராப்புராணம் - பத்றுப் படலம் என்ற முதல் இஸ்லாமிய நூலுக்கு உரையெழுதி, முஸ்லிம் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் உதவினார். இஸ்லாமிய இலக்கிய நூல்கள் பாடசாலைகளில் அறிமுகப்படுத்துவற்கு எடுக்கப்பட்ட அத்தனை முயற்சிகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**வெளியீட்டாளர்:**

தம் சமூகத்திற்குத் தரமான நூல்களை வழங்க வேண்டும் என்ற நோக்கில், தம்முடைய ஆக்கங்களைப் பிரசுரிப்பது பற்றிச் சிறிதும் கவலைப்படாமல், தமது காலநேரத்தைப் பயன்படுத்தி தம் சொந்தப் பணத்தில் பிறர் ஆக்கங்களை வெளியிடுவதில் கவிஞர் சுபைர் முன்னின்றுள்ளார்.

ஜாவீது நாமா, இக்பால் இதயம், ருபய்யாத், இஸ்லாமியத் தென்றல் இரசூல் சதகம், செய்னம்பு நாச்சியார் மான்மியம், தியாகச் சுடர் போன்ற தரமான நூற்களை அவர் பதிப்பித்துள்ளார். சொந்தமாக நூல்களை வாங்கிப் படிக்கும் பழக்கம் தமிழ் வாசகர்களிடம் - குறிப்பாக தமிழ் பேசும் முஸ்லிம்களிடம் அரிதாக இருந்த நிலையிலும் கூட, தரமான ஆக்கங்களுக்கு நூலுருவம் கொடுத்து, அவற்றைச் சமூதாயத்திற்கு வழங்க வேண்டும் என்ற ஒரே நோக்கில் பிரசுரித்தார். விற்பனை அருகி, அவற்றில் அவர் நட்டமே அடைந்தபோதிலும், அதனைப் பெருந்தன்மையோடு ஏற்றுக்கொண்டார்.

ஆங்கில மொழிபெயர்ப்புகளிலும், தமிழ் தழுவல்களிலும் பிழையாகச் சித்தரிக்கப்பட்டிருந்த உமர்கையாமை, இலங்கை வாசகர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக, கவிஞர் திலகம் அப்துல் காதர் லெப்பை அவர்களிடம் கோரி, உமர்கையாமின் ருபய்யாத்தை அற்புதமாக மொழிபெயர்த்து வெளியிட்டார். இது 1965இல் கவிஞர் திலகம் அப்துல் காதர் லெப்பைக்குச் சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றுக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

கவிஞர் சுபைர் அவர்களின் மற்றுமோர் சேவை, கடந்த நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களில் காத்தான்குடி முஸ்லிம்கள் மத்தியில் நிலவிய திருமணச் சம்பிரதாயங்களையும், மற்றும் சடங்குகளையும் சித்தரிக்கும் "செய்னம்பு நாச்சியார் மான்மியம்" என்ற கவிதைத் தொடரை மணிக்குரலில் தொடராக வெளியிட்டுப் பின்னர் நூலுருவில் பிரசுரித்ததாகும். மலர்ந்த வாழ்வு, காலத்தின் குரல்கள், மலரும் மனமும், கண்ணான மச்சி என்பன அவரால் இயற்றப்பட்டு, நூலுருவில் வெளிவந்த சிறந்த நூல்களாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பட்டமும் பாராட்டுக்களும்:**

*1981.11.11*இல் "கவிஞர் சுபைர் பாராட்டு விழா" நாடாளுமன்ற சபாநாயகர் அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார் தலைமையில் நடைபெற்றபோது, "ஈழத்துக்கவிமணி" என்ற பட்டத்தை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் வழங்கினார்.

*1991*இல் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட வாழ்வோரை வாழ்த்துவோம் பாராட்டு விழாவின்போது, கவித்தாரகை பட்டம் வழங்கப்பட்டது.

மலேசியத் தமிழறிஞர் பட்டர்வேர்த் ஜெய்னுதீன் அவர்களின் தலைமையில் இயங்கும் கவிமாலை இலக்கிய அமைப்பு "இலக்கியமணி" என்ற கௌரவப் பட்டத்தை வழங்கியது.

*1993*ஆம் ஆண்டு தென்னிந்திய ஐயம்பேட்டையில் நடைபெற்ற திருக்குர்ஆன் மாநாட்டில் கௌரவப்படுத்துவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்தபோதிலும், சுகயீனம் காரணமாக சமுகமளிக்காததால், அதே ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் கொழும்பு "ரமதா ரெனய் ஸான்ஸ்" ஹோட்டலில் நடைபெற்ற பாராட்டு விழாவின்போது, அன்றைய பாராளுமன்றச் சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முஹம்மத் அவர்களால் பொன்னாடை போர்த்தியும், இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்களால் விருது வழங்கியும், வீடமைப்புத்துறை அமைச்சர் அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் அவர்களால் பொற்கிழி வழங்கியும் பாராட்டப்பட்டார்.

கவிஞர் சுபைர் அவர்கள் கவிதை, சிறுவர் பாக்கள், நாட்டுப் பாடல்கள் ஆகியவற்றுக்கு வழங்கியுள்ள பங்களிப்பானது கவித்துறையில் நீங்காத நிலையான ஓர் இடத்தை தமிழ்பேசும் நல்லுலகில் அவருக்குப் பெற்றுக் கொடுத்தது. இரண்டொரு கவிதைகளை மட்டும் எழுதிவிட்டுப் போலித்தனமாக தானும் ஒரு கவிஞர் என்று மார்தட்டிக் கொள்ளும் மனிதர்கள் வாழும் உலகில் இவர் நிரந்தரக் கவிஞராக, உண்மைக் கவிஞராகப் போற்றப்பட்டார். தமிழ் இலக்கியத்திற்கு ஆற்றியுள்ள பணி காரணமாக இவர் ஓர் அறிஞராக மதிக்கப்பட்டார்.

அவர் எம்மை விட்டும் மறைந்துவிட்ட போதிலும் அவரின் இலக்கியப் பங்களிப்பின் விசாலத் தன்மை சரியாகப் புரிந்து கொள்ளப்பட்டு, முழுமையான முறையில் சீர்தூக்கிப் பார்க்கப்பட்டு, அவர் விட்ட இடத்திலிருந்து தமிழ் இலக்கியம் வளர்க்க இன்றைய தலைமுறையினர் திடம்பூண வேண்டும்!

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தடம்பதித்த மூத்த கவிஞர்கள்

# மௌனித்தாயேன்?

விழித்துக் கொண்டேன் என்று
உன்னுள்ளம் சொல்கிறதா?
உண்மையில் நீயுன்னை
ஏமாற்றிக் கொள்கிறாயா?

உன்சுயநலம் தானே
உன்னையும் உன்மனதையும்
முரண்படவைத்து இன்னும்
ஏமாற்றிக் கொள்கிறது

வீரப் பேச்சுதிர்த்த உந்தன்
வாயின்று ஊமையானதே
மனம்விட்டுச் சொல் இதுவும்
உன்சுயநலத்தின் விளைவுதானோ

உச்சமாய் ஒலித்த
உன்வாயும் மௌனித்ததே அந்த
உண்மையைச் சொல்லவா
உலகிதை நம்புமா?

சொச்ச சுகத்தினை
சோபிக்கும் வாழ்வினை
சொந்தமாய்க் கொண்டிட
சோரந்தான் போனாயோ?

சொந்தவுன் சமூகத்தை
அடகுதான் வைத்தாயே
எமையெல்லாம்
ஆளும் இறையின் நெருப்புக்கு
ஆளாவதை மறந்தாயோ?

●



**கவிஞர்**
**நியாஸ் ஏ ஸமத்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவிஞர் மோ. பொம்மிடி மோகன்தாஸ்**
அவர்களால் ஆங்கில மொழிக்கு மாற்றப்பட்ட

**கவிஞர் நழீம் ஹனீபா** (ஒலுவில்) அவர்களின்

# ஹைக்கூ கவிதைகள்

01-
உழவனின் உழைப்பு
அதிகரித்துக் கொண்டே இருக்கும்
கடன் சுமை.

01-
*farmer's toil*
*gets increased*
*debt burden.*

02-
பள்ளி செல்லும் வழியில்
கவனத்தை ஈர்க்கிறது
தெருவோர தேநீர்க் கடை.

02-
*school access*
*attention gets attracted*
*street tea shop.*

03-
ஆரோக்கியமான உடல்
மன நிம்மதி தருகிறது
நோயற்ற வாழ்வு.

03-
*healthy body*
*renders equanimity*
*disease free life.*

04-
பனிப் படர்வு
இதமாக இருக்கிறது
வீசும் காற்று.

04-
*spreading mist*
*more coolness*
*breeze.*

05-
இதயத் துடிப்பு
உடல் உறுப்புகளை இயக்கிறது
மூளையின் செயற்பாடு.

05-
*heart beat*
*activates organs*
*function of brain.*

06-
பலத்த காற்று
அழகிய ஒலியை எழுப்புகிறது
அசையும் மூங்கில் காடு.

06-
*intense wind*
*raises pleasing sound*
*bamboo wood.*

07-
புத்தக வாசிப்பு
அதிக பயன் தருகிறது
இணைய வழிக் கல்வி.

07-
*book reading*
*gives better outcomes*
*online teaching.*

**Translated by: Poet Bommidi Mohandoss.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18-06-2023 தந்தையர் தினத்தையொட்டி
தன் தந்தைக்காக மனமுருகி வடித்த சிறப்புக் கவிதை.
ஆக்கம்: சிரேஷ்ட ஊடகவியலாளர், எழுத்தாளர், கவிஞர்
கலாபூஷணம் பி. எம். எம். ஏ. காதர்.

# என்னை வாழ வைத்த தந்தை!


வறுமையின் விளிம்பில் வாழ்ந்து
வாழ்தலைப் புரிந்து கொண்டு
பொறுமை காத்த பொக்கிஷம்
உயர் அன்புத் தந்தை.

தோளிலே என்னைச் சுமந்து
துன்பத்தை உள்ளத்தில் சுமந்து
துயர் காட்டாமல் மகிழ்ந்த
நிறை அன்புத் தந்தை.

உண்மை, சத்தியம் உயர்வென
உணர்வோடு உள்ளத்தில் ஊட்டி
உள்ளம் மகிழ உரையாடியவர்
உயர்வான அன்புத் தந்தை.

கள்ளம் இல்லாமல் நல்ல
கனிவோடு வாழ்ந்து மறைந்தும்
உள்ளம் நிறைவாக வாழும்
நல்லாசான் எனது தந்தை.

நேர்மையாய் வாழச் சொல்லி
நேர்த்தியாய் உடுக்கச் சொல்லி
கூர்மையாய் வாசிக்கச் சொன்னவர்
உயிரான அன்புத் தந்தை.


பத்துமுகம்மது ராவுத்தர்
பீர்முகம்மது

**- கலாபூஷணம்**

**பி. எம். எம். ஏ. காதர்.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஹைக்கூ கவிதைகள்

குருவி போல சேமிக்கிறான்
கருமி போலக் காக்கிறான்
அந்தோ இழக்கிறான் வரதட்சணையில்

●

விழித்தே கிடக்கிறது
பசித்தவனையும் புசித்தவனையும் பார்த்து
நெடிய இரவோடு நிலா

●

பள்ளி நெருங்க நெருங்க
குறைந்து வருகிறது
மாணவரின் சுற்றுலா மகிழ்ச்சி

●

கிளைநுனியில் கறுப்புப் பட்டாம்பூச்சி
மிகவும் வசீகரமாக இருக்கிறது
நிலவின் பின்னணி ஒளியில்

●

முயற்சியைக் கைவிடவில்லை
துரும்புகளைத் தூணாகப் பற்றியபடி
நெற்கதிரில் ஏறும் வண்ணவண்டு

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- Dr. ஜலீலா முஸம்மில்.
ஏறாவூர்.

வானவில்லை விழுங்கிக் கொண்டதோ
மரத்தின் சிறு துளைகளில்?
இளைப்பாறும் பொன்னி வண்டுகள்

●

யன்னல் க்ரில் வழியாக
தாவும் சூரியஒளி
தரையில் நிழல்கோலம்

●

பூட்டிய அறை
உள்ளே கேட்டது
தனிமையின் ஓசை

●

எதிர்ப்பட்டவுடன்
உறவுடன் சேதிசொல்லித் திரும்பும்
சுமையோடு எறும்பு

●

ஆலமர இலைகள்
காற்றில் மிதந்து வரும்
கொக்குகளின் குரல்

●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்த உறவும்
# இறை நியதியும்

இரத்த உறவுப்பிரிவென்பது இறைசொல் மீறல்.
உறவு பிரிந்து உயரப்பறந்திட நினைப்பதென்பது,
இறை சொல்லை சவாலுக்கிழுப்ப தென்பதுதான்.
உனைவுன்னால் உணர முடியாத துனக்கேன் வீராப்பு?

உறவென்பது கைவிலங்கல்ல பரந்துபட்டவெளி!
பட்ட வெளிதாண்டி பறந்திட நினைத்தாய் நீ!
முடியவில்லையுன்னால் கானல் நீர் நீ கண்டாய்!
பட்டென ஏமாந்த நீ இறை நியதிதனையுணர்வாய்!

வாழ்க்கை என்பது போராட்டம் உறவென்பது சீராட்டம்
கீழ்க்கை நீள்வதென்பதுதான் மாறாட்டம்
நிலை குழைந்து போவதென்பது வேராட்டும்
இறை நியதிதான் எப்போதும் பார் ஆட்டும்!

**- செம்மைத்துளியான்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறக்கிறேன்.

இப்போதெல்லாம்,
ஓர் அமைதி கங்கையை
புன்னகையோடு கடக்க முடிகிறது.

இப்போதெல்லாம்,
பிரார்த்தனைகளின் பிரதி பலன்களை
முழுமையாய் உணர முடிகிறது.

இப்போதெல்லாம்,
நிம்மதிச் சிம்மாசனத்தில்
என் ராஜ்ஜியத்தை இயக்க முடிகிறது.

ஒவ்வொரு புரிதல்களும்
சுகமாய் உணரும் போது
நான் சுதந்திரமாய்ப் பறக்கிறேன்...

பகை வளர்க்கும் செவிலியை,
விஷம் காக்கும் சர்ப்பத்தை,
வெட்டி வீழ்த்தும் மரவனை,
அந்த அரணை எனக்களித்து,

எனக்கான நிம்மதியை,
என் புன்னகையை,
என் சுவாசத்தை
எனக்களித்த இறைவனிடமே
மீண்டும் என் கரங்கள் நீளும் போது
நான் மீண்டு...
மீண்டும் பறக்கிறேன்...

**- பாத்திமா ஸூபா.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றும் விடிந்துவிட்டது

மந்தார வானத்தின்
மனசு சரியில்லை...
அரை குறை நித்திரையில்
அழுது தீர்க்கும் குழந்தை போல
ஆங்காங்கே மழைத் தூறல்

உதிர்ந்து விட்ட மலராய்
நிலம் வெறித்துப் பார்த்து
நிமிராமல் குந்தியிருக்கிறாள்
எடுத்தெறிந்து போன
கணவனை எண்ணி
எதிர் வீட்டு சகோதரி...

இன்றேனும்
வைத்தியரைச் சந்திக்கும்
இறுதித் தருணமாகட்டும்
என்றவாறு
வற்றிப்போன நம்பிக்கையில்
வரண்ட வார்த்தைகளோடு
மனக் கொப்புளங்களுடன்
கடந்து செல்லும் ஒருத்தி...

கன்னிக் கருத்தரித்த மனைவிக்கு
பலாப்பழம் வாங்கிக் கொடுக்க
வரவு மிஞ்சாமல்
தலையைச் சொறிந்தபடி
கண்கள் சிவந்து முனகும்
அரச ஊழியன்...

இந்த இடை மழைக்கும்
என் வீட்டுக் கூரை
ஒழுகி விடக்கூடாதென்ற
பிரார்த்தனையோடுதான் நான்!

**- எழுகவி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு துருவங்கள்

மேகத்திற்குள் ஒழியும் நிலவின் அழகும்
நடுநிசியில் இரசிக்கும் பாவையின் விழிகளும்
ஆழிப் போர்வைக்குள் ஒன்றாய் சங்கமித்தன
கதிரவனும் கண்ணீரோடு ஒடுங்கிப் போக
விண் செக்கச் சிவக்க ஏனோ
இராத் தூதன் மதி மயங்க
தென்றல் கூட புயலாய் மாற
இடியும் மின்னலும் சீறிப் பாய
விண்மீன்கள் கண் சிமிட்டி வெட்கிக்க
கரை ஓரத்தில் கால் தடங்கள்
கைக் கோர்த்து சிகரம் தொட்டது
கணவன் மனைவி புரிதலின் அடையாளமாக!

**- ஹப்ஸா பஹுமீர்.**
ஹுரிமலுவ, இறம்புக்கணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்னயம்

வாழ்க்கை என்றும்
நலமாய் அமைய
சொல்லும் செயலும்
சரிவரப் பேணி
உடலும் உள்ளமும் பொறுமையில் நனைந்து
மற்றோர் கருத்துக்கும் மரியாதை கொடுத்து
உயிரெனப் போற்றும்
மானம் காத்து
மாண்புடன் உலகில்
வாழ்ந்திடல் வேண்டும்

பிரச்சனைகள் தோன்றி
பிளவுகளும் தரும்
நிதானம் தவறின்
நிம்மதியும் தொலையும்
மானம் காக்கும்
மனத்திடம் கொண்டு
மண்ணில் பொறுமை
மிகைத்திடல் வேண்டும்
நாளைய பொழுதை
நலமாகக் கழித்திட
நன்னயம் செய்து
நல்வழி நடப்பீர்.

**-மாஹிரா ஹமீட் அஸ்ஹர்.**
கம்பளை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரி வழங்கு

வெருடமிரு போகம் செய்தெடுக்கும்
  வயல்களெல்லாமே தண்ணீரின்றி
குரக்கன் கொத்தவும் இடந்தராமல்
  குளத்தில் நீர்வற்றிப் போயிருக்கி
அரக்க குணமானோர் குளத்து நீரை
  அகற்றி விடுவதால் தொல்லையாச்சு
இரக்க மிகவான எங்கள் றப்பே
  இனிய மழையதைத் தந்தருள்வாய்

வாரமொரு மழைபெய்ய வைத்து
  வளங்க ளெல்லாமே மிகுதமாக்கி
நேரகாலத்தில் நெல் விதைத்து
  நெருங்காமல் பஞ்சமதை துரத்த
ஏரி குளமெல்லாம் நிறைய வைத்து
  எங்கள் மீதுந்தன் இரக்கங் காட்டி
வாரி வழங்கிடு றப்பே யுந்தன்
  வளங்க ளெல்லாமே எங்களுக்கு

இரக்கமதன் வாசல் திறந்து வைத்து
  எல்லோரு மின்நாட்டின் பிள்ளையென்ற
பெருமை மிகவான ஒற்றுமையால்
  பேதங்க ளெல்லாம் மறந்து வாழ்ந்து
துரும்பளவும் மனக்கசப்பு வந்திடாமல்
  தூயோனே எங்களைப் பாதுகாத்து
பருந்தும் கிளியுமாய் இருந்தோரெல்லாம்
  பாலும் சுவையுமாய் ஆக்குவாயே!

**- அலியார் TO**
சம்மாந்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்ணிலா உன் பணி தொடரட்டும்!

வானத்து வெண்ணிலவு
மாதமொரு முறை,
வையகம் தன்னை
வண்ண மயமாக்கும் - அதே வேளை,

பூமியில் ஒரு வெண்ணிலவு
மூன்று மாதங்களுக்கொரு தடவை
பூமியில் உள்ளவர்க்கு,
புதுத் தெம்பூட்டுகிறது.

கடந்த பல விடயங்களை
கட்டியம் கூறி,
விடயங்கள் தெரியாதோரை
வியப்பூட்டும் - வெண்ணிலா.

இலக்கிய வாதிகளின்
இணையற்ற ஆக்கங்களை,
முத்தாக வெளியிடும்
சத்தான வெண்ணிலாவே.

தெரியாத விடயங்கள் பலவற்றை
தெளிவூட்டி அறிவூட்டும்
வெண்ணிலா - நீ
வெண் நிலவு தான்.

மறைந்த எழுத்தாளர்களின்
மாண்புமிகு திறமைகளை
மற்றவர் அறிந்து போற்ற
வழிவகுத்த வெண்ணிலாவே.

வெளி நாட்டிலும் வெண்ணிலா
வீறு நடை போட,
அந் நாட்டின் ஆக்கங்கள்
அனு தினமும் வரவேண்டும்.

ஒன்பது வெண்ணிலாக்களை
ஒழுங்காகப் பெற்றுவிட்டோம்
பத்தாவது வெண்ணிலாவை
பார்த்திருக்கோம் - ஆவலாக.

**- ஏ. ஆர். அப்துல் றஸூல்**
ஓய்வுநிலை அதிபர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகிக்கும் வெம்மை!

குளிரணைக்கும் மழையை துரத்தி
அனல் அடிக்கும் வெய்யிலைத் தானே
நீங்களும் கேட்கிறீர்கள்...

சுட்டெரிக்கிறதே
வாடி வரண்டு போகிறதே
தாகிக்கிறதே என்றெல்லாம்
இப்போது குற்றம் சொல்லி
என்ன பலன் கூறுங்கள்...?

இதில்,
உடல் உருக்கி வழிவதாய்
ஆடை நனைத்து
கொட்டும் வியர்வையிலும்

கையில் சுடச் சுட
ஒரு குவளை தேநீரோடுதான்
இப்போதும் அமர்ந்திருக்கிறீர்கள்...

என்னவென்று சொல்ல...?

நான் இங்கே
தகிக்கும் வெம்மையை பற்றி
மட்டுமேதான் கூறுகின்றேன்

உங்கள் அன்பை பற்றியல்ல.

**- இமையி.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கதிரை

கதிரைக்கு மூச்சுத்தட்டுகிறது
இவனுக்குள்
இவன் கட்டிவைத்திருக்கிற
மூட்டைகளைச் சுமக்க
அதுக்கு இயலாது

எத்தனையோ
பாரமானவர்களையும்
பாரமில்லாதவர்களையும்
சுமந்து பார்த்த கதிரைக்கு
இப்போது மூச்சுத்தட்டுகிறது

மூட்டைகளை சுமப்பது
கதிரையின் வேலையல்ல
அது
சிறப்பானவர்களைச் சுமந்து
சிம்மாசனமாகவே விரும்புகிறது
அதனால்தான் கதிரைகளை
மேடைகளில் அமர்த்துகிறார்கள்

பாரமில்லாதவன்
பாரமாகிற போதுதான்
அதற்கு ஆச்சரியமாக இருக்கிறது
இவ்வளவு மூட்டைகளையும்
இவன் எப்படி இந்த
இரண்டு கால்களில் சுமக்கிறான் என்று

பாரமில்லாதவர்கள்
தங்களைப் பாரமாக்கிக்
கொள்வதற்காகத்தான் மனசில்
பாரமூட்டைகளை
அதிகம் சுமக்கிறார்கள் போல

பாரமில்லாதவன் கனமூட்டைகளோடு
பாரமாகிற போதுதான்
பாரமானவன் இருக்கும் போது
உடையாத கதிரை
பாரமில்லாதவன் இருக்கும் போது
உடைந்து விடுகிறது !

- ஓலுவில்
எஸ். ஜலால்டீன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழுகறிவு

வாமுடல் கிழித்து
தேனிடை நெய்தல் தரும்
தையலே
மானுட மகிடிக்கும்
மனங்கொண்டோர் இரங்கற்கும்
ஏதிலும் ஏதுவாய் நீயடி

கூவிடக் குரங்கெனத் தாவிட
கூரியன கொண்டுனை தாக்கிடத்
தேவைகள் ஏதடி

வாயிலே வில்லையும் நாவிலே
அம்பையும் பாசமே நஞ்செனத்
தடவிய அற்புத வேடுவர்
இவர்காண் இங்கிருக்க

எய்வானோ ஆயுதம் கொய்வானோ
உன் சிரசினை
இல்லையே.....
இல்லையே..... உன்விரல்
ஊன்றி நீ உன் தலை சாய்த்திட
ஏவுதல் தானுமாய் மாய்த்திட்டு
மாய்தல் நீயுமாய் நகர்த்தி
நடந்திடத்தானடி யாவரும்

கண்கொத்திப் பாம்புகள்
மெய் கொத்தும் பாரடி உன்
மெய்யினை நீயுமே காத்திடத்
துணிந்திங்கு வாவடி!

- க. ஷியா.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆடு கண்ட சுகம்

தாகித்தலைந்ததோர் ஆடு
நீரின்றி புற்களின்றி
பசியாய் பாவமாய்

வெள்ளை மணல் வளவு
கல் தூண் போட்ட
கம்பி வேலி
ஆட்டின் பார்வையில்
அதுவொன்றும் காவலல்ல

எப்படிப் பாய்ந்ததோ
எதனால் ஊர்ந்ததோ
நீர்ப் பூவலடியில்
நின்றது ஆடு

நீரையருந்தியே தாகம்
தீர்ந்தது
பூவலை வளைத்து
சில்லென்ற புற்கள்
வியாபித்துக் கிடந்தது
பசியை அடைக்க
ஆடதில் மேய்ந்தது

சற்றே ஆடு தலையினையுயர்த்த
கொத்துக் கும்பங்கள்
உயரத்தில் தெரிந்தது
முன்காலை உயர்த்தி
கொத்தினைப் பிடித்து
வாயினை அழுத்தி
வடிவாய் உண்டது

தாகித்தலைந்த
ஆட்டுக்கங்கே
வாழ்க்கையின் அனைத்தும்
வடிவாய் அமைந்தது

பாவம் ஆடு
தோட்டக்காரன் வந்தால்
சூப்புவைப்பா னென்று
தெரியாமல் அதுவும்
மயக்கத்தில் படுக்குது!

**- எம் எச் ஏ கரீம்.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிரியுங்கள்

மனதுக்குப் பிடித்தமான
கைகளை
உற்பத்தி செய்து கொள்ளுங்கள்.

விரல்களைப் பிடித்து
ஒவ்வொரு பெயர் வைத்து
உறவுகளுக்கும் ஊட்டி விடுங்கள்.

சோறு கறி முட்டை
பால் பழம் என
பட்டியல் பத்து வரை பகிர்ந்தளித்து
ஆனந்தம் அடையுங்கள்.

உள்ளங்கை தாங்கி
ஆட கட மோ கட
முழங்கையால் கடைந்து பாருங்கள்.

தேவர்களும் அசுரர்களும்
நினைவுக்கு வருகையில்
தப்பியுங்கள்.

நண்டூருது பாடி
நரி ஊருது பாடி
அக்குளு கிளு மூட்டுங்கள்.

சிரியுங்கள்
சிரியுங்கள்
நானும் சிரித்துக்கொள்கிறேன்.

**- காரையன் கதன்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிந்தோடும் அருவி

நீரோடையிலெறிகிறது எனை
ஆசைத்தாகம்
தொடையளந்த நீரை
தொட்டியாக்குகிறேன்
தெரியாத நீச்சலுக்கு

மேய்ந்து களைத்த மேகங்கள்
மலையுச்சியில் குளிக்கின்றன
ஏறும் பாசியறியா அருவி
எட்டுமிடத்தில்
வழுக்கி விழுந்துடைகிறது

ஓரத்து மரங்களிதில்
கம்பீர ரகசியம் கடத்துகின்றன
மடக்கிப் பிடித்திருக்கின்றன
தப்பி வந்த
மலைக் குட்டிகளையும்

என்னைக் கடக்கும் அவசரம்
நதியொன்றிலேறி
கடல் கண்டெடுக்கவோ?

**- ஷியாம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவில்

முதலாம் தவணைப்
பரீட்சைத் தாள்களைத்
திருத்திக்கொண்டிருந்தேன்
அதற்குள் சில மாணவர்கள்
சிரித்தார்கள்
சிலர் அழுதார்கள்
இன்னும் பலர் குழப்படி செய்தார்கள்
இரவு கழியக்கழிய
இன்னுமின்னுமாக அணிவகுத்தார்கள்
பரீட்சைத்தாள்களுக்குள்
அவர்கள் மடிந்திருப்பதை அறிவேன்.

இடையிடையே அவர்களின் முகபாவனை
என்னில் இரக்க ஆற்றைப்
பெருக்கெடுக்கச் செய்தது.

வழமையாகவே வகுப்பறையில்
கூறிப்பழகிய அறிவுரைகேட்டு
படித்திருக்கிறார்கள்
சிறிதளவு படித்திருக்கிறார்கள்
அதிகமாகப் படித்திருக்கிறார்கள்
படிக்காமலேயே கழித்திருக்கிறார்கள்.

அவர்கள் பரீட்சை எழுதுவதில்
அக்கறை எடுப்பதைத் தவிர
தனது பெறுபேறுகளுக்காக
பறந்து திரிவார்கள்.

**- டீன் கபூர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை

ஜன்னல் கம்பிகளுக்குப் பின்னாலும்
ஒரு வாழ்க்கை இருக்கிறது தோழி...
வா வாழ்ந்து பார்க்கலாம்!

சமையற்கட்டு தாண்டி,
படிக்கட்டு தாண்டி,
படுக்கை அறை தாண்டி,
வேறொரு உலகம் இருக்கிறது தோழி...
வா வாழ்ந்து பார்க்கலாம்!

கண்கவர் மேக்கப்,
பல்சுவை உணவு,
நொடிக்கொரு ஷாப்பிங்,
தினம் ஒரு பயணம் என்று
போலி உலகு தாண்டி
ஒரு உலகம் இருக்கிறது தோழி...
வா வாழ்ந்து பார்க்கலாம்!

கள்ளம் தெரியா புன்னகை
உள்ளம் நெகிழும் பட்டினி
சுற்றம் காணா உறவுகள்
பற்று அறியா நெஞ்சங்கள் என
வேறொரு உலகம் இருக்கிறது தோழி...
வா வாழ்ந்து பார்க்கலாம்!

நித்தம் ஒரு அலறல்
சித்தம் புரியா குமுறல்
சுயம் தெரியா ஏக்கம்
பயம் காணும் தாக்கம் என
வேறொரு உலகம் இருக்கிறது தோழி...
வா வாழ்ந்து பார்க்கலாம்!

தலை கோதி ஒரு முத்தம்
விரல் பற்றி ஒரு தைரியம்
முதுகு தட்டி ஓர் ஊக்கம்
தோள் அணைத்து ஓர் ஆறுதல் என
வேறொரு உலகம் இருக்கிறது தோழி...
வா வாழ்ந்து பார்க்கலாம்!

அவளுக்கென்ன,
அவளுக்கெதற்கு,
அவளுக்கேது,
அவளுக்கெப்படி...
என்ற வசனம்
எல்லாம் தாண்டி
வேறொரு உலகம்
இருக்கிறது தோழி...
வா வாழ்ந்து பார்க்கலாம்!

நாலு சுவர் தாண்டி
நாலு கம்பி தாண்டி
நாலு வேலை இருக்கிறது
நாலு உலகம்
இருக்கிறது தோழி...
வா வாழ்ந்து பார்க்கலாம்!

- ஹுமதா ஏ கப்பார்.
உயன்வத்த.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படித்தவற்றில் பிடித்தவை.

# கைவிடுதல்

மிகவும் அவதானமாயிருக்க நேர்கிறது
ஒரு பொதுவான குறையைப்
பொது வெளியில் பகிரும்போது

நிறையச் சிந்திக்க வேண்டியிருக்கிறது
யாரையும் நேரடியாகத் தாக்கும்
உள் நோக்கம் இல்லையென்ற போதும்

சில வேளைகளில்
சொல்வதைக் கைவிடவேண்டி நேர்கிறது
நெஞ்சுக்கு நெருக்கமான ஒருவரை
நோகடித்து விடுமோ என்ற ஆதங்கத்தில்

என்னைப் போலவே
என்னையறிந்த யாரோ ஒருவர்
எனக்காகவே கைவிட்டிருத்தல் கூடும்
தனது பொதுவான கருத்தை!

**- அஷ்ரஃப் சிஹாப்தீன்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோர்வெதற்கு?

சோறு ஆக்கும் வேலை தானே
சோர்வெதற்கு? என்கிறார்கள்
அடுப்படி வேலை தானே
அலுப்பெதற்கு? என்கிறார்கள்

அலாரம் அடிக்குமுன்னே
அரைகுறை தூக்கத்துல
அடுப்படிக்கு எழுந்து வந்து
பாலெடுத்து சூடு பண்ணி

காப்பிய கலந்தெடுத்து
கணவனுக்கு கொடுத்துபுட்டு
பிள்ளைகளை எழுப்பி விட்டு
பள்ளிக்கூடம் கிளப்பி விட்டு

காலை உணவு செஞ்சி
கணவனுக்கு போட்டு வச்சி
அலுவலகம் அனுப்பி விட்டு
அலுப்பு தீர படுக்க போனா

கூடையில பாதி துணி
குளித்த இடத்தில் மீதி துணி
சட்டி ஒரு மூலையில
சாக்ஸ் ஒரு ஓரத்துல

சத்தம் போட்டு திட்டிக்கிட்டே
சடுதியா பொறுக்கிப் போட்டு
துணி துவச்சி எடுத்து வந்து
சூட்டுல காயப் போட்டு
மத்தியான சோறாக்கி
மடமடன்னு வீடு கூட்டி
ராத்திரிக்கு சோறாக்கி
ரா உணவு கொடுத்துப்புட்டு

அலுப்போட அறைக்கு வந்து
அக்கடான்னு படுக்கலான்னா
பொண்டாட்டி கடமையின்னு
புருசன் காரன் கூப்புடுவான்

அவன் கடமை முடிஞ்சதுன்னு
அவன் போயி தூங்கிடுவான்
எங்க கடன் என்னான்னு
யார் இருக்கா கேட்பதற்கு?

சோறு ஆக்கும் வேலை தானே
சோர்வெதற்கு? என்கிறார்கள்
அடுப்படி வேலை தானே
அலுப்பெதற்கு? என்கிறார்கள்.

(இது எனக்கானது மட்டுமல்ல
எல்லா பெண்களுக்குமானது)

**-கவி செல்வா.**
திருச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடும் பயணம்

ஊரின் கிணற்றடியில்
உயிர் நனைந்த பொழுதின்
வேர்களை விட்டு
வெளிக்கிட்டு நாளாச்சு

முழுமையாக தொலைந்த பின்னும்
செக்கேறிய மரம்போல
சேர்ந்து செல்லும் நினைவுகளை
வெட்டி நோக்கினாலும்
வெடுக்கென முளைக்கின்றது.

என் வீட்டு காற்று
பனமட்டை வேலிகள்
புழுதி  வழி பயணம்
தடம் பார்த்து  பதியும் மழைக்காலம்
பிடுங்கி தொலைத்தாரோ

பற்றைகள் இருபக்கமும்
பார்த்து மகிழ்ந்திருக்கும்
பள்ளிக்கென்னை
அழைத்துச்சென்ற
ஒற்றையடி சாலைகளே
உள்ளீரோ இன்று வரை

மீண்டும் செல்வேனோ
பசுமையெல்லாம் பொய்த்துப்போய்
இங்கே தான் சாவேனோ
நானறியேன்.

இன்றிந்த
தேசத்திலே
வாழ்க்கையை புதைத்து விட்டோம்
பிணங்களாய் கருகுது
பிரதேச நெடுஞ்சாலையிலே
நாங்கள்தான்
நெடும் பயணம் ஒன்றை தொலைத்து.

**- வி. அபிவர்ணா.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைபெற இன்னும் வெகுநேரமில்லை!

ஒரு சிறு முன்னிரவில்
படுத்திருக்கிறேன்
இப்படியே எத்தனை நாட்கள்
கழிந்ததென
ஞாபகங்களில்லை

இமைகளின் மேலமர்ந்து
கொன்று கொண்டிருந்த இறுக்கம்
தீராப்பசியோடு உடல் முழுவதும்
விரிந்து கொண்டிருந்தது

ஓ...! ஓஓ...!!
இதுதான் அந்த மரணத்தின்
நெருக்க வருகையா?

வாழ நினைத்து
பரத்திப் பார்த்த நாட்களெல்லாம்
இன்றென் முதுகுக்கு கீழால்
சுருட்டப்படும் வலி
எதையோ பிடுங்கியது போலவே

இப்போதென்னால்
அசையவோ ஓசைகளெழுப்பவோ
முடியவில்லையே!
ஓடிக் களைத்த கால்கள்
ஆட மறுத்திருக்கின்றனவே!

இந்தக் குடலும்,
ஈரலும் கூட
அருகிலிருப்பவர்களுக்கு
ஏதோவொரு சேதியை அறிவிப்புச்
செய்திருக்கக் கூடும்!

சுருங்க மறுக்கும் இதயம்
அதை,
பலவந்தமாய்ப் பொத்திப்பிடிக்கும்
அந்த மரணதூதர்களின் முயற்சி
மறத்துக் கொண்டிருக்கும்
பாகங்கள் தாண்டியும்
ரணங்களாய்

யாரும் நெருங்கியென்னைத்
தொட்டிடக் கூடாதென
அவாவுறும் மனது
நிர்பந்தமாய் விலங்கிடப்பட்டிருக்க

சத்தங்களால் சூழப்பட்ட
காதுகள் இப்போது
நிசப்தத்தைச் சுவைத்தபடி,
யாரோ...
உணவு இறங்கவில்லையென்று
கூறிய சத்தமே
அதன் இறுதித் துலங்களாக

இப்போது,
கண்கள் செருகிக் கொள்ள
நெற்றியைச் சுருக்கிப் பார்க்கிறேன்
மனம் விரிய மறுத்த கூட்டமொன்று
என் தலைமாட்டிலும்
கால்பகுதியிலும்
தவறாமல் கூடியிருக்கின்றது

அவர்களைக் கடந்து செல்லும்
மரணத்தின் மௌனக்குரல் மட்டும்
மொழிபெயர்த்தறியவைக்கிறது
சிறு புன்னகை,
வழிவிடுங்கள்!

விடைபெற
இன்னும் வெகுநேரமில்லை!

**- வானம்பாடி முஜா.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூல் பதிவு

## ஒரு வீடும் பன்னிரண்டு வருடங்களும்.

கவிஞர்
- மருதமுனை ஹஸன் -

மேலான
அரசாங்க ஐயாவுக்கு,

ஓர் அபலை
பணிவுடன் எழுதுவது...

கூத்துங் குடியும் கும்மாளமும்
கொடிகட்டிப் பறந்த அந்த
மேட்டு வீட்டுத்திட்ட வீடுகள்
பகிர்ந்தளிக்கப் பட்டதாகக்
கேள்விப் பட்டேன்
ஒருபுறம் திருப்தி
மறுபுறம் துயர்

முன்னர் இருதடவை
பயனாளர் பட்டியல்
பகிரங்கமாகவே ஒட்டப் பட்டது
எனது பெயரும் அதில் அடக்கம்
ஏதேதோ காரணத்தால்
கிடப்பில் கிடந்து கிழிந்து
போயிற்று

நிரந்தர வீடின்றி
நிர்க்கதியான நானும் கணவரும்
மூன்று பிள்ளைகள்
குஞ்சும் குராலுமாய்

மழைமிகுந்த மார்கழியிலும்
வெயிலெறிக்கும் சித்திரையிலும்
தட்டுமுட்டுச் சாமான்களுடன்
வாடகை வீடுகள் தாவிய
வன்கொடுமை மிகுந்த காலங்கள்
வார்த்தைகளில் வடிக்க
முடியாதவை

அப்போது மூத்த மகள்
ஆறு வயதில் அடியெடுத்து
வைத்திருந்தாள்
இப்போது O/Lக்கு
உயர்ந்துவிட்டாள்

இடையில் நேர்முகப்
பரீட்சையென
ஐந்தாறு தரம் அங்கும்
இங்குமென
ஏறி இறங்கி ஆவணங்களைக்
காட்டி
அலைந்து திரிந்த நாட்கள்
இன்னும் எரிகிறது நெஞ்சில்

எனது பெயரையும்
உறுதிப் படுத்தவென
ஏதோ கேட்ட
ஓடுவான் பாடுவான்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை வைத்தே
அரசியல் கதிரைக்கு
இலந்தை பிடிக்கும்
அந்தக நாயகர்கள்...

நினைத்தால் நெஞ்சுக்குள்
நெருஞ்சி படர்கிறது

மேலான ஐயா அவர்களே!
அலைவாய்க் கரையோரம்
ஒருதுண்டு வெம்பு மணலுக்கு
மேட்டில் ஒரு வீடும் வளவும்
தனவந்தர் பெற்றுவிட்டார்
ஏற்கனவே நஷ்ட ஈட்டுத்
தொகையும்
எல்லாமும் பெற்றிருந்தார்

வேதனையை இறக்க வேறேது
முகநூலைத் தவிர?

சுனாமிபோல் இன்னொன்று
துருக்கிபோல் வேறொன்று
வந்துவிடக் கூடாதென்று
வல்லவனை வேண்டுகிறேன்

எனக்குக் கிடைக்கவில்லை
ஏனவர்க்கு என்று
கொட்டிக் கவிழ்க்கவும்
எண்ணமில்லை

என்போல் இன்னொருத்தி
இன்னல் படக் கூடாதென்று
எண்ணியதால் அதனைச்
செய்யவில்லை
மனத்தைத் தேற்றிக்
கொள்கிறேன்

மேலான ஐயா!

மீதமுள்ள வீட்டிற்கும்
அபராதி அவர்கள் வருவார்கள்
ஆவணங்கள் சமைத்தெடுத்து
அலைவாய்க் கரையோரம்
இன்னொரு துண்டும்
தனக்குக் கிடந்ததென்று

ஆதலினால் ஐயா,

உங்கள் அலுவலகக்
காணிப் பதிவேடுகளைக்
கவனமாய் வைத்திருங்கள்
கைபிடிக்க ஓடிவரும்
காதகரைக் களிநெஞ்சரைக்
கழுமுள்ளால் குத்துங்கள்

மடைதிறந்த வெள்ளமென
மனத்தில் உதித்தவைகள் ஏராளம்
ஏதோ கொஞ்சம் இறக்கி
விட்டேன்
எனக்குமொரு வழி பிறக்கும்
காலமகள் கண் திறக்காமலா
போய் விடுவாள்?


ஐயா!
தப்பெதுவும் சொல்லியிருந்தால்
மன்னிக்கவும்.

இப்படிக்கு
இன்னும் வாடகை வீட்டு வாசலில்
புதிய வீட்டைக் காத்திருக்கும்
ஓர் அபலை.

*14-04-2023.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களிடமிருந்து




● மருதமுனையிலிருந்து வெளிவரும் **வெண்ணிலா** கவிதை இதழ் - 9 கிடைக்கப் பெற்றேன். நாற்பத்து இரண்டு பக்க இதழில் கவிஞர் பட்டாளம் ஒன்று பங்களிப்புச் செய்திருக்கிறது.

கவிதை மஞ்சரி என்று குறிப்பிடப்பட்ட இந்த இதழில் 'மேடை வானொலி நாடகங்களில் கிண்ணியா முஸ்லிம் களின் பங்களிப்பு' என்று ஒரு கட்டுரை இடம்பெற்றுள்ளது.

சிரேட்ட, கனிஷ்ட கவிஞர்களால் நிறைந்திருக்கிறது இதழ்.

ஒவ்வொரு இதழையும் மழையில் நனைந்து விடாமல் மிக நேர்த்தியாக பொலித்தீன் பை இட்டு அதற்கு மேல் தபால் உறை இட்டு அனுப்புவதெல்லாம் வேறு லெவல்.

ஆசிரியர் நண்பர் கப்பார் அவரே இதழை வடிவமைக்கிறார் என்பது குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது.

விட்டு விலகுவதில்லை என்ற சஞ்சிகை ஆசிரியரின் முனைப்பும் கடும் உழைப்பும் இதழ்களின் மூலம் புரிந்து கொள்ள முடிகிறது. இன்றைய நிலையில் ஐம்பது ரூபாவுக்குக் கிடைக்கும் ஒரே சஞ்சிகையும் இதுதான்.

தமது பங்களிப்பை கவிஞர்கள் இச்சஞ்சிகைக்கு வழங்கி ஊக்குவிக்க வேண்டும் என்பது எனது வேண்டுகோள்.

**- கவிஞர், எழுத்தாளர்**
**அஷ்ரஃப் சிஹாப்தீன்.**
**29-04-2023.**

● வெண்ணிலா கவிதை மஞ்சரி 9 ஆவது இதழ் அழகிய அட்டையுடன் மூன்றாவது ஆண்டு ஆரம்ப இதழாக வெளிவந்திருக்கிறது.

ஏ. எம். கஸ்புல்லாவின் கிண்ணியா முஸ்லிம் கலைஞர்களின் நாடகப் பங்களிப்பு பற்றிய பெறுமதியான ஆய்வுக் கட்டுரையுடன் பி. எம். எம். ஏ. காதர், அலியார் (TO), விஜிலி, டாக்டர். ஜலீலா முஸம்மில், மசூறா, ஷிபானா அஸீம், கவிமணி அ. கௌரிதாசன், ஜமீல், நபீல் ஆகியோரின் கவிதைகள் உட்பட இன்னும் ஏராளமான கவிஞர்களின் கவிதைகளுடன் எனது 'அந்தி பூத்த வைகறை' (கவிதைத் தொகுப்பு), பாலமுனை பாறூக் கின் 'பாவேந்தல் பாடல்கள்', ஜே. வஹாப்தீனின் 'ஒலுவில் பிரதேச வெகுசனப் பாடல்கள்', ஷிபானா அஸீமின் 'காதலென்பது வேறொன்று மில்லை' (கவிதை தொகுப்பு)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களை, கிடைக்கப் பெற்ற கவிதைத் தொகுப்புகளாகக் கொண்டு நேர்த்தியான வடிவமைப்பில் இன்னும் பல ஆக்கங்களுடன் வெளிவந்திருக்கிறது.

தற்போதைய நாட்டு நிலைமையில் இது ஒரு பெரு முயற்சியாகும்.

மஞ்சரியின் ஆசிரியர் கவிஞர் எஸ். ஏ. கப்பார் அவர்களுக்கு வாழ்த்துகளும் பாராட்டுகளும்.

**- கவிஞர், எழுத்தாளர்**
**ஒலுவில் எஸ். ஜலால்டீன்.**
**29-04-2023.**

● 9ஆவது காலாண்டிதழ் என் கரம் கிடைத்தது, மகிழ்ந்தேன். அது சுமந்து வந்த கட்டுரை, கவிதைகள் அனைத்தும் இதழின் தரத்தை மெருகூட்டுகின்றன. ஆசிரியர் கவிஞர் எஸ் ஏ கப்பார் அவர்களின் அளப்பரிய அர்ப்பணிப்பு இதழில் தெரிகிறது. அவரின் அயராத முயற்சி பாராட்டுக்குரியது. **வெண்ணிலா** எதிர்காலத்தில் மாத இதழாக வெளிவர வேண்டும் என ஆவல் கொள்கிறேன். புகழ் பெற்ற பல கவிஞர்கள் மற்றும் புதிய கவிஞர்களின் படைப்புகள் அதில் இடம் பெற்றுள்ளன. முதன் முறையாக எனது கவிதைகளும் இடம் பிடித்ததில் ஆனந்தம் அடைகிறேன். வளர்ந்து வரும் கவிஞர்களுக்கு களம் கொடுத்து முன்னேற தட்டிக்கொடுக்கும் முயற்சி சிறப்பானது. அது தடையின்றி தனது பயணத்தைத் தொடர நல்வாழ்த்துகள்.

**- கவிஞர் நழீம் ஹனீபா, ஒலுவில்.**
**05-04-2023.**

● கவிஞர் எஸ். ஏ. கப்பார் அவர்களை ஆசிரியராகக் கொண்டு **வெண்ணிலா** என்னும் காலாண்டிதழ், கவிதைக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியாகின்றது. அதன் ஒன்பதாவது இதழ், ஏப்ரல் 2023, தற்போது வெளியாகியுள்ளது. மருதமுனை, இலங்கையிலிருந்து வெளிவரும் இதழ்.

இவ்விதழில் எனது **முகநூற் பதிவொன்றினையும்** பிரசுரித்துள்ளார்கள். அதற்காக **வெண்ணிலா**வுக்கு என் நன்றி. சஞ்சிகை மேன்மேலும் தமிழ் இலக்கிய உலகில் சாதனை புரிந்திட வாழ்த்துகின்றேன்.

**- எழுத்தாளர் வ. ந. கிரிதரன்.**
**04-04-2023.**

● இது 9வது இதழ். இதழின் வருகையில் முகப்புக் கீறல் ரசனை வடிவமைப்பாய் உள்ளது. கிழக்கின் முன்னிலை சஞ்சிகையாக இதனைக் கோடிட முடியும். காரணம் அழகியல், தொடர் வருகை, நேர்த்தியான கவிதைக்காரர்களின் எழுத்துருவாக்கமே. 27ற்கு அதிகமான கவிதைக்காரர்கள் எட்டிப் பார்ப்பது மகிழ்வு தருகிறது.

பிற்குறிப்பொன்றில் வாசகர்களின் வாக்கு மூலங்களும் பதிவாகியுள்ளன. புதிய வருகைப் பிரதிகளும் தடம் பதித்துள்ளன.

எழுத்தாளர் வ. ந. கிரிதரனின் முகநூல் பதிவு முக்கிய அடையாள மாகும்.

கவிஞர் டீன் கபூரின் மொழிமாற்றம் செய்யப்பட்ட **வேரினிடை** புனைவும் முத்தாய்ப்பாயுள்ளது.

பொதுவில் அனைத்து எழுத்துக்களும் புதுமையாகவும் தேர்ந்த கவித்துவங்கள் பொதிந்தனவாகவும் அமைந்துள்ளன.

**- கவிஞர் மருதமுனை விஜிலி.**
**14-04-2023.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெண்ணிலா**
கவிதை மஞ்சரியின் சிரேஷ்ட ஆலோசகராகிய
வைத்திய அதிகாரி

**Dr. எஸ். ஏ. ஜஹ்பர்** MBBS (Colombo),
(MO, Clinical Microbiology)
Ashraff Memorial Hospital, Kalmunai.


அவர்கள் 28-05-2023 அன்று காலமானார்கள்.

அன்னாரின் பிரிவுத்துயர் தாங்காது வேதனையில் வாடி வதங்கும் அவரது மனைவி, மக்கள், சகோதரர்கள், உறவினர்கள், வைத்தியசாலை சக ஊழியர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரோடும் **வெண்ணிலா** கவிதை மஞ்சரியும் இணைந்துகொள்கிறது.

அன்னாரின் சுவன வாழ்வு ஈடேற்றம் பெற வல்ல இறைவனைப் பிராத்திக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி: ஊடகவியலாளர் - றாசிக் நபாயிஸ், ஆவணக் காப்பகம்.



இச் சஞ்சிகை, இல. 378/2, ஸைக் ஸம் வீதி, மருதமுனை-03, டிஜிட்டல் இன்ஃபரமேஷன் சிஸ்டம் (DIS) நிறுவனத்தினரால் 289, பிரதான வீதி, மருதமுனை Jesa Grafix இல் அச்சிட்டு ஜூலை 2023இல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்முனை மாநகரில் (அமானா வங்கி முன்பாக) ...

- நேரடியாக சகலவிதமான விமான பயண டிக்கற்களை உடனடியாக பெற்றுக் கொள்வதோடு
- Budget & Economy வெளிநாட்டு சுற்றுலா ஏற்பாடுகள் (India, Maldives, Thailand & Europe)
- வெளிநாடு ஒன்றிற்கு குடிபெயர்வதற்கான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள்
- Other Air ticketing related services
- Hajj & Umra Arangements
- Visa related Assistances
- Student Visa Guidance

IATA

# mH Travels & Tours

Since 1986

*Ur Travel & Progress Companion*

No. 9, Main Street, Kalmunai. Hotline : 077 067 3062
Head Office : 323, Maccamady Road, Maruthamunai - 03. Tel : 067 222 9486
mhtravelsntours@gmail.com Tel : 067 205 9434, 075 808 9968


## Business & Tax consultation in the Heart of Kalmunai Town...

- Tax Planning
- Income Tax
- VAT / SVAT
- NBT / ESC (old)
- CGT
- PAYE / APIT (Employer)
- Agribusiness consultation
- Audit
- Accounts Preparation
- IAS / IFRS, LKAS / SLFRS Consultancy
- Book Keeping
- Outsourcing services
- POS Solution
- Cooperate Secretarial Services

# elite
**Biz & Tax Consultancy**

No. 10, Main Street, Kalmunai. M : 077 067 3062
Tel : 067 205 9434, info@elitetaxcon.com, www.elitetaxcon.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இச் சஞ்சிகை, இல. 378/2, ஸம் ஸம் வீதி, மருதமுனை-03, டிஜிட்டல் இன்ஃபர்மேஷன் சிஸ்டம் (DIS) நிறுவனத்தினால் 289, பிரதான வீதி, மருதமுனை Jesa Grafix இல் [illegible] 2023இல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org